
ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# முதலியாண்டான் வைபவம்

Dr. V.V. ராமாநுஜன் (ஆசிரியர், யதிராஜ பாதுகா)



ஸ்ரீ முதலியாண்டான் - பேட்டை

ஸ்ரீரங்கப்ரியா பதிப்பகம், திருவல்லிக்கேணி.

RangaRakes

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீதாசரதி மஹாகுரவே நம:

# முதலியாண்டான் வைபவம்

எழுதியவர்
ஸம்ப்ரதாய ரத்நம், ஸ்ரீவைஷ்ணவஸிம்மம்
**Dr. V.V. ராமாநுஜன்**
பேராசிரியர் (ஓய்வு) சென்னை பல்கலைக்கழகம்
ஆசிரியர், **யதிராஜபாதுகா**

**ஸ்ரீரங்கப்ரியா பதிப்பகம்**
68, (புதிய எண். 114), டி.பி. கோயில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

tamilnavarasam.com

முதல் பதிப்பு தாரண

சித்திரை - ஏப்ரல் 2004

விலை ரூ.20.00

அச்சிட்டோர்: RNR Printers & Publishers.
19 Thandavaryan Street,
Triplicane, Chennai - 600 005
☏: 2844 1856

ஸ்ரீ:

# அடியேன் விண்ணப்பம்

பாதுகேயதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா ।
தஸ்ய தாஸரதே: பாதௌ சிரஸாதாரயாம்யஹம் ॥
ஸ்ரீவைஷ்ணவசிரோபூஷா ஸ்ரீ ராமாநுஜ பாதுகா ।
ஸ்ரீவாதூலகுலோத்தம்ஸ: ஸ்ரீதாசரதிரேததாம் ॥

**முதலியாண்டான்** என்று நம் ஸம்ப்ரதாயத்தில் ப்ரஸித்தரான தாசரதிமஹாகுரு ஸ்வாமி எம்பெருமானாரின் ஸ்ஹோதரி குமாரராக பச்சைவாரணப்பெருமாள் கோவில் எனும் ஊரில் அவதரித்தவர். இவ்வூர் தற்சமயம் "பேட்டை" என்றே அழைக்கப்படுகிறது. எதிராஜரான ஜகத்குரு இவரைத் தமது த்ரிதண்டமாக மதித்திருந்தார். இவரோ ஜகதாசார்யரான ஸ்வாமியின் பாதுகங்களாகவே தம்மை நினைத்திருந்தார். எம்பெருமானார் ஸந்யாஸாச்ரமம் புகும்போது "நமது முதலியாண்டானையொழிய ஸந்யஸித்தோம்" என்று அருளியதாக ப்ரஸித்தவரலாறு. மொழியைக்கடக்கும் பெரும்புகழான் - ஆன கூரத்தாழ்வானும் தாசரதியும் ஸ்வாமி ராமாநுஜரை முதல் முன்னம் ஆச்ரயித்தவர்கள். ஆழ்வான், ஆண்டான் என்று இவர்களைச் சேர்த்தே வ்யவஹரிப்பர் பெரியோர். இவர்களை ஸ்வாமியின் தண்டும் பவித்ரமுமாகச் சொல்வது ஸம்ப்ரதாயம். "பதக்கு ஆத்மஸம்பந்தமிருப்பினும் உழக்கு தேஹஸம்பந்தமில்லையே நமக்கு: முதலியாண்டானுக்கல்லவோ அப்பெருமை" என்று ஆழ்வான் மனதில் குறையுண்டு என்பர். ஸ்வாமி சிஷ்யர் ஸமூகத்துக்குத் தலைவராய் முதலியாண்டான் என்று பட்டப்பெயர் போல் பெற்றது தவிர ஸ்ரீரங்கஸ்ரீயை ஆண்டு நிர்வஹிக்கும்படி சேனைமுதலியார் திருப்பிரம்பு (செங்கோல்) திருவரங்கனாலேயே ஸாதிக்கப் பெற்றது இவரது நிர்வாஹத்திறமையை பறை சாற்றுகிறது. வாதூலகுலதிலகரான இவர் வாதூலதேசிகர் என்றே அழைக்கப்பட்டார். இம்மஹாசார்யரின் திருவம்சத்தில் உதித்தவர்கள் கந்தாடையார் என்ற ப்ரஸித்த திருநாமமுடையவர்களாய் சிஷ்யஸம்பத்நிறைந்த ஆசார்யபுருஷர்களாக விளங்குகிறார்கள்.

இவ்வாசார்யருடைய வாழ்க்கை வரலாறு ஆசார்யரான ஸ்ரீராமாநுஜருடைய வாழ்க்கையுடன் பின்னிக்கிடப்பது. குருபரம்பராப்ரபாவம் தவிர, கோயிலொழுகு, வார்த்தாமாலை, முதலியநூல்களிலும்

RangaRakes

tamilnavarasam.com

வாழ்க்கைக்குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. அருளிச்செயல் வ்யாக்யானங்களிலும் இவர் ஸம்பந்தப்பட்ட ஐதிஹ்யங்களும், இவருடைய நிர்வாஹங்கள் பலவும் காணப்படுகின்றன. இப்படி கிடைக்கக்கூடிய விஷயங்களையெல்லாவற்றையும் திரட்டி ஒரு நூலாக எழுதி அதை யதிராஜபாதுகா வில் 1981ம் ஆண்டில் தொடராக வெளியிடப்ராப்தமாயிற்று. அத்தொடர்கட்டுரைகளை ஸ்ரீரங்கம் "ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ" ஸ்ரீ உ.வே. கிருஷ்ணமாசார்யஸ்வாமி பல ஆண்டுகளுக்குமுன் ஒரு நூலக வெளியிட்டார். இப்போது நமது வெளியீடாகவே மறுபதிப்பு செய்து வெளியிடலாகிறது.

இந்நூல் வெளியீட்டிற்கு பெருமளவில் அம்பத்தூர் ஸ்ரீ உ.வே. A.K. சடகோபாசார்யஸ்வாமி நிறுவிய "தர்க்கதீர்த்தம் பாரதம் ரங்காசார்யஸ்வாமி நினைவு ட்ரஸ்ட்" நிர்வாஹிகள் அந்த ட்ரஸ்டிலிருந்து நிதியுதவி பண்ணியுள்ளனர். அம்பத்தூர் ஸ்வாமி குமாரர் ஸ்ரீ உ.வே. A.K. ஸுந்தரராஜன் ஸ்வாமிக்கும் அவர் ஸஹோதரர்களுக்கும் அடியேனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களுக்கு "நல்லபதத்தால் மனைவாழ்வர் கொண்டபெண்டிர் மக்களே" என்று எம்பெருமான் எல்லா ஸௌபாக்யங்களையும் அருளவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

யதிராஜபாதுகா தாஸன்
**V.V. ராமாநுஜன்**

திருவல்லிக்கேணி
சித்திரைப்புநர்வஸு
26.4.2004

யதிராஜபாதுகாவில் வெளிவந்தபோது வாசித்து மகிழ்ந்து அடியேனைப் பாராட்டி ஊக்குவித்து ஆசீர்வதித்த அஸ்மதாசார்யஸ்வாமி ஸ்ரீமத் வேதமார்க்கப்ரதிஷ்டாபனாசார்யோபய வேதாந்தசார்யரான ஸ்ரீமான்

கோயில் கந்தாடை வாதூலதேசிக அண்ணவிலப்பன்
**ஸ்ரீகுமாரவேங்கடாசார்ய ஸ்வாமி**

ஸந்நிதியில் நினைவஞ்சலியாக இந்நூலை ஸமர்ப்பிக்கிறேன்.

RangaRakes



# முதலியாண்டான் வைபவம்

## 1. அறிமுகம்: யதிராஜ பாதுகா

**பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா।**
**தஸ்ய தாசரதே: பாதௌ சிரஸா தாரயாம்யஹம்॥**

ஸ்ரீவைஷ்ணவ உலகில் பெருமைக்குரிய ஆசார்ய புருஷர்களாகத் திகழும் கோவில் கந்தாடை வாதூல வம்சத்தவர்களின் மூலபுருஷர் **முதலியாண்டான்** என்று போற்றப்படும் தாசரதிமஹாகுரு ஆவார். இவர் ஸ்ரீராமாநுஜரின் ஸகோதரி புதல்வர் (பாகிநேயர்). இவருடைய ஆத்மகுணங்களால் ஈர்க்கப்பட்ட எதிராசர் இவரை த்ரிதண்டமாக மதித்திருந்தார். ஸ்ரீவைஷ்ணவத் துறவிகளின் கையில் எப்போதும் ஏந்தப்படும் த்ரிதண்டம் விஷ்ணுஸ்வரூபமாகும். ஆசார்ய பாரதந்த்ரியமே (பாரதந்த்ரியம் - எசமானனுக்கு வாய்த்த அடிமையாய் இருத்தல்) வடிவான முதலியாண்டான் தன்னை யதிராஜபாதுகங்களாக (திருவடிநிலைகளாகவே) எண்ணியிருந்தார். மேலே காணும் "**பாதுகே யதிராஜஸ்ய**" என்ற முதலியாண்டான் தனியன் (ஆசாரியனைப் போற்றுவதாக அமைந்த பாசுரம்) "யதிராஜருக்குப் பாதுகை, என்று போற்றப்படும் தாசரதிமஹாகுருவின் (முதலியாண்டானின்) திருவடிகளை என் தலையால் தாங்கி வணங்குகிறேன்" என்று பொருள்படும்.

இராமபிரான் இலக்குவனைத் தம்பியாகப் போற்றியிருந்தான். ஆனால் தம்பியோ, "**குணைர்தாஸ்ய முபாகத:**" என்கிறபடி அண்ணனுடைய குணங்களுக்குத் தோற்று அடிமையாகத் தன்னை மதித்திருந்தான். இதனால், "**லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:**" என்று செல்வச்சீமானாக

tamilnavarasam.com

(கைங்கர்யஶ்ரீ மிகச்சிறந்த ஐஶ்வர்யமாகும்) வால்மீகியால் கொண்டாடப்பட்டமை காண்க.

எம்பெருமானின் பாதுகைகளை **ஸ்ரீசடகோபன்** என்று போற்றி நம் தலைக்கணியாகப் பெற்று மகிழ்கிறோம். ★பூமகள்கோன் பூங்கழற்குப் பாதுகமாய் தாம் மகிழும் செல்வச் சடகோபர்★ என்பது மணவாளமாமுனிகள் பாசுரம். பகவத் பாதுகையாய் இருப்பதில் மகிழ்ச்சி அடைபவர் ஸ்ரீமானானநம்மாழ்வார். நம்மாழ்வார் திருவடிநிலைகள் மாறனடி பணிந்துய்ந்த **இராமானுசன்**. இராமானுசன் திருவடி நிலைகள் **முதலியாண்டான்**. ஸ்ரீசடகோபன் நமது தலைக்கணியாய் ஸாதிக்கப்படும் போது எம்பெருமான் தன் திருவடிகளால் நம்மைத் தீண்டி வாழ்விக்கிறான் என்று அறியவேண்டும். இதனால் நமக்கு ஆழ்வார் ஸம்பந்தம் கிடைப்பதால் க்ருதார்த்தர்களாகிறோம். இப்படியே எதிராசன் திருவடிகளை நம் தலைக்கணியாய்ப் பெறுகையில் முதலியாண்டானுடைய விலக்ஷணஸம்பந்தம் நமக்குக் கிட்டுகிறது. பகவத்தாஸ்யத்தைவிட ஆசார்யனுக்கு தாஸனாயுள்ள நிலையே சீரியதாக நமது ஸம்ப்ரதாயத்தில் போற்றப்படுகையால் யதிராஜபாதுகையான முதலியாண்டானின் ஸம்பந்தம் மிகச் சீரியது என்பது சொல்லாமலே விளங்கும். இதுவே அனைத்துலகும் வாழப்பிறந்த எதிராசமாமுனிவன் நமக்களிக்கும் மாபெறும் பேறு.

ஜீவாத்மாவின் வடிகட்டின ஸ்வரூபம் பாரதந்த்ரியமேயாகும். இதை இராமாயண புருஷர்கள் தம் நடத்தையில் வெவ்வேறு விதமாகக் காட்டினர். தந்தைசொல் தவறாமல் நடந்தனன் இராமபிரான், அண்ணனை வனத்திலும் தொடர்ந்து அவனுக்கு எல்லா அடிமைகளும் செய்து போந்தான் லக்ஷ்மணன். அண்ணன்

RangaRakes



சொல் கடவாமல், தாயின் செயலால் வந்த பழியையும் சுமந்து பதினாலாண்டுகள் ராமபாதுகைகளைத் துணைகொண்டு அரசாண்டனன் பரதன். பரம பாகவதனான பரதனையே தெய்வமாகக் கொண்டு ஒழுகினான் சத்ருக்னன். இவை நான்கினுள் சத்ருக்னன் நிலையே மிகவும் போற்றத் தக்கது என்பது ஸத்ஸம்ப்ரதாயம். நம்மாழ்வாரைத் தவிர **தேவுமற்றறியேன்** என்று இருந்த மதுரகவியாழ்வாரின் நிலை **சத்ருக்னன்படி** என்று கொண்டாடப்படுகிறது. மிகவும் உயர்ந்த நிலையான இந்த ஆசார்யபாரதந்த்ரியத்தை வாழ்க்கையில் அநுஷ்டித்துக்காட்ட இராமபிரானே முதலியாண்டானாக வந்து பிறந்தானாம்.

**மேஷே புநர்வஸுதிநே தாசரத்யம்ஶ ஸம்பவம்|**
**யதீந்த்ர பாதுகாபிக்யம் வந்தே தாசரதிம் குரும்||**

“ராமபிரான் இவ்வுலகில் வந்தவரித்த சித்திரைப் புநர்வஸு நன்னாளில் தாசரதியான (தசரதன்மகனான) அவன் அம்சமாக வந்துதித்து, யதீந்த்ர பர்துகைகளாய் போற்றப்படும் தாசரதிமாகுருவை (முதலியாண்டானை) வணங்குகிறேன்” என்ற பூர்வர்கள் பாசுரம் மேலே சொன்ன உண்மையை உணர்த்துகிறது. **யதீந்த்ர பாதுகாபிக்யம்** என்றதனால் ஆசார்ய பாரதந்த்ரியம் உணர்த்தப்பட்டது. பெருமாள் ராமபிரானாக வந்தவதரித்தபோது திருவநந்தாழ்வான் இளையோனாக வந்து பிறந்து அவனுக்கு எல்லாவடிமைகளும் செய்து உகப்பித்தான். அந்த கைங்கர்ய ரஸத்தைத் தான் முற்றப்பருகவேண்டும் என்று ஆசைகொண்ட பெருமாள் திருவநந்தாழ்வானை இராமானுசனாகப் பிறப்பித்து, தானே அவர் ஸகோதரி புதல்வனாய் வந்துதித்து தாசரதி என்ற பெயருடன் அவருக்கு அந்தரங்க கைங்கர்யங்களைச் செய்து மகிழ்வுற்றான்.

tamilnavarasam.com

உடையவரின் சிஷ்யர்களான ஸ்ரீவைஷ்ணவ ஸ்வாமிகள் (முதல்வர்கள்) இவரை ஆண்டானாக (ஆளும்பிரானாக) மதித்ததினால் இவர் முதலியாண்டான் ஆனார். ஆனால் இவரோ எதிராசருக்கும் அவர்களுக்கும் அடிமையாயிருத்தலையே விரும்பினார். ஒரு சமயம் இராமானுஜர் இவரைத் தனது ஆசார்யனான பெரியநம்பிகளின் குமாரத்தி அத்துழாய்க்கு பணிப்பெண்ணாக (சீதன வெள்ளாட்டி) அனுப்பினார். இவரும் அத்துழாயின் மாமியாரகத்தில் ஒரு பணிப்பெண் செய்யும் அடிமைத் தொழில்களை மனநிறைவுடன் செய்ததாக சரித்திரம் கூறும். இதுவன்றோ பாரதந்த்ரியத்திற்கு இலக்கணம்?

ஸ்ரீவைஷ்ணவசிரோபூஷா ஸ்ரீராமாநுஜபாதுகா|
வாதூலகுலோத்தம்ஸ ஸ்ரீதாசரதிரேததாம்||

"ஸ்ரீராமானுஜ பாதுகையாய் ஸ்ரீவைஷ்ணவர் யாவருக்கும் தலைக்கணியாய்த் திகழும் வாதூலகுல திலகரான (தாசரதி) முதலியாண்டான் புகழ் ஓங்குக!" என்பது மேலே காட்டிய தனியன்.

யதிராஜருக்கும் முதலியாண்டானுக்கும் உள்ள உறவை காட்டும் ஒரு ப்ரஸித்தமான ச்லோகம்:

அஜஹத்பாகிநேயத்வம் பாதுகாத்வம் த்ரிதண்டதாம்|
ஸம்ப்ராப்தோ யதிராஜஸ்ய குணைஸ்தத்ப்ரீதி ஹேதுபி:||

"மகிழ்விக்கும் ஆத்மகுணபூர்த்தியால் யதிராஜருக்கு விலகாத ஸஹோதரிபுத்ரர் என்ற உறவையும், பாதுகையாகையையும், த்ரிதண்டமாகையையும் ஆகிய மூன்று நிலையினைப் பெற்றார் (முதலியாண்டான்)." பாகிநேயர் (மருமான்) என்ற உறவு பிறகியால் வந்தாகிலும் தாய்மாமன் துறவியானபோது அது தானே விலகிவிட வேண்டும். யதீந்த்ரரான ராமாநுஜர் இவ்வுறவை விலக்கவில்லை. "முதலியாண்டானை ஒழிய



ஸந்யஸித்தோம்" என்றதும், இவரது பாதவத குணங்களை போற்றி த்ரிதண்டமாகவும் பாதுகையாகவும் மதித்ததும் இவர் உள்ளத் தூய்மையையும் பாரதந்த்ரியத்தையும் பற்றியவையாதல் வேண்டும். மேல் நாட்டிக் வைஷ்ணவரல்லாத பலர் வாழ்ந்த ஒரு ஊரில் ஊரார் நீர்முகக்கும் ஊருணியில் யதிராஜர் கட்டளைப்படி முதலியாண்டான் தம் திருவடிகளை விளக்க (அலம்ப) அந்த ஸ்ரீபாததீர்த்தத்தைப் பருகிய அவ்வூரார் மனம் மாறி உடையவர் பக்கல் ப்ரவணராக ஆயினர் என்றும் வரலாறு இவர் மனத் தூய்மையைப் புலப்படுத்தும்.

மணவாளமாமுனிகள் இவ்வாசாரியர் விஷயமாகப் பணித்த ஒரு முக்தகத்தில் (விடுதிப்பாட்டில்) இவர் ஒருங்கே அடிமையும் ஆண்டானுமாக விளங்குவதைக் கூறுகிறார்.

யபூர்வம் பரதார்த்தித: ப்ரதிநிதிம் ஸ்ரீபாதுகாமாத்மந:
ராஜ்யாய ப்ரததௌ ஸ ஏவஹி குருஶ்ரீதாசரத்யாத்மவான்|
பூத்வா லக்ஷ்மண பாதுகாந்திமயுகே ஸ்வாத்மநாம் ச்ரேயஸே
ஸாம்ராஜ்யம் ஸ்வயமேவ நிர்வஹதி நோ வைஷ்ணவம் குலஸ்யோத்தமம்||

"எவன் முன்பொருகால் பரதனால் வேண்டப்பட்டுத்தன் திருவடிநிலைகளைத் தன் ப்ரதிநிதியாகத் தந்தானோ, அவனே (அந்த ராமபிரானே) ஸ்ரீதாசரதிகுரு (முதலியாண்டான்) என்ற திருநாமம் பூண்ட ஆசார்யனாய் கலிகாலத்தில் நம் குலத்திற்கு உத்தம தெய்வமான ஸ்ரீயதிராஜபாதுகையாகி எல்லா ஆத்மாக்களும் உய்யும் வண்ணம் ஸ்ரீவைஷ்ணவ ஸாம்ராஜ்யத்தை தானே இங்கு நடத்துகிறான்."

நம்பூர்வர்கள் முதலியாண்டான் விஷயமாக அமைத்துள்ள துதிகள் யாவையிலும் இவர் யதிராஜ பாதுகையாகக் கொண்டாடப்படுவதிலிருந்து அந்த

RangaRakes tamilnavarasam.com

ஆகாரமே இவருக்கு மிகவும் உகப்பையளிப்பது என்பது விளங்குகிறது.

## 2. மூன்று உறவுகள்

அநுஜத்பாகிநேயத்வம் பாதுகாத்வம் த்ரிதண்டதாம். ஸம்ப்ராப்தோ யதிராஜஸ்ய - என்கிறபடி முதலியாண்டானுக்கும் எதிராசனான உடையவருக்கும் அமைந்த மூன்று உறவுகளை மேலும் ஆராய்வோம். அநுஜத் பாகிநேயத்வம் யதிராஜஸ்ய - யதிசேகரருக்கு உடன் பிறந்தாள் மகன் என்ற உறவு விலகாமல் அமைந்தது போற்றப்படுகிறது.

பிதரம் மாதரம் தாராந் புத்ராந் பந்தூந் ஸகீந் குரூந்|
ரத்நாநி தநதாந்யாநி க்ஷேத்ராணி ச க்ருஹாணி ச||
ஸர்வ தர்மாம்ஶ்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ஶ்ச ஸாக்ஷராந்|
லோகவிக்ராந்த சரணௌ ஶரணம் தேऽவ்ரஜம் விபோ||

என்று தந்தை, தாய், மனைவி, மக்கள், சுற்றம், வீடு, விளைநிலம் முதலான எல்லாவற்றையும் நசையறத் துறந்தே அவன் திருவடிகளைப் பேற்றுக்கு உபாயமாகப் பற்றுவதாக ஶரணாகதி என்பது பார்க்கப்படுகிறது. லௌகிகத் தொடர்புகளை யாவையும் முற்றுமாகவிட்டே ப்ரபத்தி நிஷ்டையை நாம் மேற்கொள்ளவேண்டும். துறவறத்தை மேற்கொள்ளுகையில் இவற்றைப் பூரணமாக விட வேண்டுவது அவசியம் என்று சொல்லத் தேவையில்லை. யதிராஜன் என்ற திருநாமம் விரக்தியின் (வைராக்யத்தின்) எல்லையைக் குறிக்கும். இப்படிப்பட்ட உடையவருக்கு முதலியாண்டான் உறவு விலகாத மருகனாக எப்படி இருக்கமுடியும்? "முதலியாண்டானை யொழிய ஸந்யஸித்தோம். ஆண்டானை த்ரிதண்டமாகவும் ஆழ்வானை பவித்ரமாகவும் கொண்டோம்" என்று யதிராஜர் அருளிச் செய்ததாக ஐதிஹ்யம். மேற்கண்ட ச்லோகத்தில் பிறப்பால்

RangaRakes



இளையாழ்வாருக்கு (எம்பெருமானாரின் பூர்வாஶ்ரம நிலையில்) மருகராக வாய்த்ததைச் சொல்லவில்லை. யதிராஜருக்குத் தமது சீரிய குணங்களினால் விலகாத உறவைப் பெற்றதாக ஆண்டான் போற்றப்படுவது காண்க. இளையாழ்வார் ஸந்யாஸாஶ்ரமம் மேற்கொண்ட பின்பே முதலியாண்டானும் கூரத்தாழ்வானும் ஸ்வாமி திருவடிகளில் ஆஶ்ரயித்து ஆத்ம ஸம்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அதன்பிறகே மாமனுக்கும் மருமகனுக்கும் நெருங்கிய பழக்கமும் உறவும் ஏற்பட்டிருக்க வேண்டும். மருகராகவும், பாதுகையாகவும், த்ரிதண்டமாகவும் இவர் மதித்துப் போற்றப்பட்டது ஸ்வாமி யதிராஜரான பின்பே ஆகையால் இவருடைய குணங்களின் மேன்மை சொல்லாமலே விளங்கும்.

இனி, "விடவேண்டும்" என்று விதிக்கப்பட்ட தேஹஸம்பந்தத்தை, விலக்க வேண்டாத உயர்ந்த உறவு என்று போற்றத் தகுமா?" என்ற கேள்விக்கு விடைகாண வேண்டியுள்ளது. சரீர ஸம்பந்தம் ஏன் விலக்கத்தக்தாகச் சொல்லப்படுகிறது? எனில், எம்பெருமானையே அடையத்தகுந்த மேலான புருஷார்த்தமாகவும் அதற்கான உபாயமாகவும் பற்றும் ப்ரபந்நனுக்கு அவனையடைய வொட்டாமல் தடுப்பதாய் உள்ளது இச்சரீரம். பகவத் ஸ்வரூப திரோதாநகரீம், ஸ்வவிஷயாயாஶ்ச போக்யபுத்தேர் ஜநநீம் - என்று பெரியகத்யத்தில் காட்டியபடி பகவத்ஸ்வருபத்தை அறியவொட்டாமல் மறைப்பதும், தன்னை இன்பம் பயக்கும் பொருளாகக் காட்டி வஞ்சிப்பதுமான இச்சரீரம் விலக்கத்தக்கது. ★நண்ணியும் நண்ணகில்லேன் நடுவேயோருடம்பிலிட்டு★ என்று திருவாய்மொழி காண்க. நம்மிடமுள்ள ஞானத்தை முழுதாக மலரவொட்டாமல் தடுப்பது இச்சரீரம். இதனால் தேஹமே ஆத்மா என்ற தவறான புத்தி

tamilnavarasam.com

(அஹங்காரம்) ஏற்படுகிறதாகையால் ஞானிகள் சரீரத்தை விரோதியாக கருதுகின்றனர். தமது சரீரமே விரோதமாகில், தமது சரீரத்தைப் பற்றிய உறவினர்களை எப்படி அநுகூலர்களாகக் கொள்ளலாம்? ★கொண்டபெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரும் கண்டதோடு பட்டதல்லால், காதல் மற்றுயாதுமில்லை★ என்று ஆழ்வார் திருவாக்கு.

திருமணம் பண்ணிக்கொண்ட மனையாள், அவள் மூலமாகப் பெற்ற மக்கள், மற்றும் பந்துக்கள் என்று சுற்றத்தவர்கள் யாவரும், நம் கையில் த்ரவியம் கண்டதனையும் பற்றுடையவர்களே. கைப்பொருள் இல்லாதவனை மதிப்பதில்லை. எம்பெருமானே திருபாதிக பந்து. ★சேலேய் கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன்மக்களும் மேலாத்தாய் தந்தையும் அவரே (பகவானே) என்றிருக்கையே நம் ஸ்வரூபத்துக்குச் சேரும். இப்படிப் பார்த்தால் ஸ்வரூபமுணர்ந்த ஒவ்வொருவனும் மனைவி, மக்கள், ஸொத்து ஆகியவற்றை விட்டு ஓடிவிடவேண்டுமா? வேண்டாம். அதற்கு அவசியமில்லை. இல்வாழ்க்கை வாழ்ந்தாலும் அதில் பற்றற்று வாழ்கையே உத்தமமான வாழ்க்கையாகும். பற்றிலார் பற்ற நின்றானே! என்று திருவரங்கனை அழைக்கிறார் ஆழ்வார். உறவினர் என்ற பற்றை ஏற்படுத்திக் கொள்ளாமல் வாழமுடியும் என்பதை ஆழ்வான் ஆண்டான் போன்ற பல மஹான்கள் நமக்குக் காட்டியுள்ளனர். பகவதநுபவத்திற்கு விரோதிகள் என்றன்றோ உறவினர்கள் விலக்கப்படவேண்டியவர்களாகிறார்கள்? அவர்களே அநுகூலர்களாகில் விலக்கவேண்டிய தேவையில்லையே? மனைவி மக்கள் இப்படி அநுகூலர்களாய் அமைவது துர்லபமேயாயினும்

RangaRakes



பாகவதோத்தமர்களான பந்துக்கள் வாய்க்கப் பெற்றால் அவர்களின் உறவை பெறாப் பேறாகப் போற்றி மதித்தல் வேண்டும். இந்த ஒளியிலேயே எதிராசனார் ஆண்டானுடைய உறவைப் போற்றி மதித்து விலகாத உறவாகக் கொண்டார். தூய உள்ளம் படைத்த பரமபாகவதர்கள் உடலினால் நமக்கு உறவினராய் வாய்த்தால் அவ்வுறவைப் போற்றி மகிழ்தல் வேண்டும் என்று நாம் உணரவேண்டும்.

மணமுள்ள வேரைச் சூடுவார் அத்துடன் கூடிய மணற்பற்றோடு சூடுவாராம். அதுபோல எம்பெருமான் தனது உயிர் எனப்போற்றும் ஞானியை ப்ராக்ருதமான தேஹத்துடனேயே விரும்புகிறானாம். தம்முடைய உடலில் எம்பெருமான் மிகவும் வ்யாமோஹம் காட்டுவதைக் கண்ட ஆழ்வார், "இது தகாது" என்று அவனுக்கு உணர்த்தத் தவறவில்லை. எம்பெருமானார் தன்னுடைச் சோதி புக்கபின்பு அவர் திருமேனியைத் தன்னுடைய கோவிலுக்குள்ளேயே வைத்துக் கொண்டான் திருவரங்கன். ப்ராக்ருத ஸம்பந்தத்தை மிகவும் ஆசைப்படுவதும், அதனால் பெருமை கொள்வதுமான இடங்களும் உண்டு. வேயர்பயந்த விளக்கு என்னும்படி அந்தணர் கொழுந்தாய் வளர்ந்த ஆண்டாள் கண்ணன்மேல் உண்டான அளவு கடந்த காதலால் ஆய்க் குலப் பெண்ணாகவே ஆகி, அக்குலப் பெண்ணொருத்தியை "மாமான் மகளே" என்று உறவு கொண்டு அழைப்பது காண்க. ஆளவந்தாரும் தமது ஸ்தோத்ரத்தின் இறுதியில், "இச்சிறியேனைக் கணிசியாமல், பாட்டனாரான நாதமுனியின் குடல்துடக்கையும், ஆத்ம ஸம்பந்தத்தையும் கொண்டு அருள்புரியவேணும்; பிதாமஹம் நாதமுநிம் விலோக்யப்ரஸீதமத்வ்ருத்தம் அசிந்தயித்வா என்று வேண்டுவது காண்க. பட்டரும், "எதிராசருடைய

tamilnavarasam.com

அடியவர்களில் தலைவர்' என்று செல்வம் படைத்த ருஷியான ஸ்ரீவத்ஸாங்கமிச்ரரின் புதல்வன் யான் - என்று பெருமை தோற்றத் தம்மைக் கூறிக் கொள்ளுகிறார். இதையெல்லாம் நோக்கின், உத்தமபாகவதர்களுடைய தேஹஸம்பந்தம் பொன்னே போல் போற்றத்தக்கது என்பது விளங்கும் எவ்வளவுதான் நெறுங்கிய ஆத்ம ஸம்பந்தம் இருந்தாகிலும் உடையவருடன் சிறிதளவாவது தனக்கு தேஹஸம்பந்தம் வாய்க்கவில்லையே என்று ஆழ்வான் குறைபட்டதாகக் கூறுவதுண்டு. முதலியாண்டான் இளையாழ்வாருக்கு பாகிநேயராய்ப் பிறந்தது பெருமையல்ல. யதிராஜரானபின்பும் அவ்வுறவு விலக்காமல் போற்றப் பெற்றதே இவருடைய ஆத்மகுணப் பெருமையைக் காட்டும். அஜஹத் பாகிநேயத்வம் ஸம்ப்ராப்த: யதிராஜஸ்ய என்று சொற்கள் அமைந்துள்ள ரஸம் போற்றி அநுபவிக்கத் தக்கது.

## மூன்று உறவுகள் - 3. முக்கோல்

வைணவத் துறவிகளுக்கு விலக்கக்கூடாத அடையாளங்களுள் த்ரிதண்டம் ஒன்று. பண்டைத்தமிழ் நாட்டு அந்தணத்துறவிகள் முக்கோற்பகவர் என்று அழைக்கப்பட்டனர். முக்கோல் தவிற வேறெவ்விதக் கோலையும் துறவிகள் கொண்டதாக எவ்விதச்சான்றும் கிடைக்கவில்லை. தொல்காப்பியத்தில் "நூலேகாரகம் முக்கோல் மணையே ஆயுங்காலை அந்தணர்க்குரிய என்றும், ஸ்ம்ருதிகளில்

த்ரிதண்டமு பவீதஞ்ச சிக்யம் காஷாயமம்பரம்
கமண்டலூர் பைக்ஷசர்யா யதீநாம்து விதீயதே என்றும்

உபவீதம் த்ரிதண்டம்ச பாத்ரம் ஜலபவித்ரகம்
கௌபீநம் கடிஸூத்ரஞ்ச நத்யஜேத் யாவதாயுஷம் என்றும்

பேசப்பட்டுள்ளமையால் பிராம்மண ஸந்யாஸிகள் சிகை(தலைமுடி) உபவீதம் (பூநூல்), த்ரிதண்டம், பவித்ரம் இவைகளை எப்போதும் விலக்காமல் கொண்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. முக்கோல் விஷ்ணுரூபமானது என்றும், "நீ எனது நண்பனாய் ஸகலரக்ஷணங்களையும் பண்ணவேண்டும்" என்று பொருள்பட மந்த்ரத்தைச் சொல்லி, முக்கோலை துறவறம் மேற்கொள்ளும் அந்தணன் கையில் ஏந்த வேண்டும். என்கையாலும், துறவி விஷ்ணுவையே வாழ்க்கைத் துணையாகப்பற்றி பாகவத நெறியில் வாழக் கூடியவன் என்று அறியலாம். பகவர் என்பது பகவத் சப்தத்தை ஸந்யாஸிகளிடம் கொண்டதைக் காட்டும். "விரும்பிப் பகவரைக் காணில் வியலிட முண்டானே யென்னும்" (திருவாய்-4-4-9) என்னுமிடத்திற்கு, "பகவத் ரூபரான மோக்ஷாஸ்ரமிகளை" என்று 12000ப்படி உரையும், "ஞாநாதிகுணபரிபூர்ணராய், சப்தாதி விஷயங்களில் விரக்தரான ஸந்யாஸிகளைக் காணில் க்ருஷ்ணனென நினைத்து அவர்களை" என்று 24000- படியும் காண்க.

பகவதம்சமாகப் பிறந்த முதலியாண்டானை இராமாநுஜர் த்ரிதண்டமாகக் கொண்டது மிகப்பொருத்தமே. "த்ரிதண்டத்தைக் கைவிட்டாலன்றோ நாம் முதலி யாண்டானைக் கைவிடுவது" என்று ஸ்வாமி ஸாதித்ததாக ப்ரஸித்தம். ஸந்யாஸ ஆச்ரமம் புகாமலே எல்லாப் பற்றுக்களையும் விட்டவர்கள் ஆண்டானும் ஆழ்வானும். இவர்களைத் தண்டும் பவித்திரமுமாக ஏற்றுத் தாம் தூய்மை பெற்றதாக எம்பெருமானார் கருதினார் என்றால் இவர்களுடைய அகத்தூய்மை அளவிடற்பாலது என்பது சொல்லாமலே விளங்கும். ராமாநுஜ அஷ்டோத்தர ஶதநாம ஸ்தோத்ரத்தில் "பவித்ரீக்ருத கூரேஶ: பாகிநேயத்ரிதண்டக: என்று இரண்டு திருநாமங்கள் காட்டப்பட்டுள்ளன. ஆழ்வானைத் துறவிக்கு இன்றியமையாத ஜலபவித்ரமாகவும், ஆண்டானை



RangaRakes
tamilnavarasam.com

(உடன் பிறந்தாள் மகன் என்றே இங்கும் கூறப்பட்டுள்ளது ரஸிக்கத்தக்கது) விலக்க இயலாத த்ரிதண்டமாகவும், எம்பெருமானாருக்கு அடையாளமாகச் சொல்வதையும் காண்க. இப்படிப்பட்ட ஸச்சிஷ்யர்களால் தான் ஒரு ஸதாசார்யனுக்குப் பெருமை பிறக்கிறது என்பதை

கூரேச குருகாநாத தாசரத்யாதி தேசிகா:।
யச்சிஷ்யா ப்ராந்திதே தஸ்மை யதிராஜாய மங்களம்॥

என்னும் ஸ்லோகம் காட்டுகிறது. ஆழ்வான், பிள்ளான், ஆண்டான் முதலான பெருப்பெருத்த ஆசாரியர்கள் உடையவருக்குச் சிஷ்யர்களாய் அமைந்து அந்த ஆசார்யருக்குப் பூர்த்தியை உண்டாக்குகிறார்களாம். ஆழ்வான், ஆண்டான் இவ்விருவரில் ஒருவரில்லாவிடினும் ஸ்வாமிக்குப் பெருங்குறையே. இவ்விருவருமில்லாவிடில் ஸ்வாமி யதிராஜராக விளங்கமுடியாது. இதுபற்றியே நித்யாநுஷ்டானத்தில் பெரியோர்கள் எம்பெருமானார் தனியனான "யோநித்யமச்யுத" ஸேவித்ததும், "ஸ்ரீவத்ஸசிஹ்நமிச்ரேப்ய:" என்று ஆழ்வானையும் "பாதுகே யதிராஜஸ்ய" என்று ஆண்டானையும் சேர்த்தே அநுஸந்திப்பது ஸம்ப்ரதாயம். இவர்கள் இருவருமே ஓராண்வழி ஆசார்யபரம்பரையில் (உடையவர்-எம்பார்-பட்டர்-நஞ்ஜீயர் என்று ஓராண்வழிக்ரமம்) வராவிடினும் எம்பெருமானாரை விட்டுப் பிரிக்க இயலாத காரணத்தால் இவர்கள் தனியன்களையும் எம்பெருமானாரதுடன் சேர்த்து அநுஸந்திப்பதே ஸத்ஸம்ப்ரதாயமாகும்.

வள்ளல் எதிராசன் வந்துதித்த பெரும்பூதூரில் எதிராசனுக்கு திருவாராதனத்தில் அர்க்ய பாத்ய உபசாரங்கள் ஸமர்ப்பிக்கப்படும் போது, யதிராஜ



பாதுகங்களுக்கும், த்ரிதண்டத்திற்கும், இவ்வுபசாரங்கள் ஸமர்ப்பிக்கப்படுகின்றன. ஸ்ரீபெரும்பூதூரில் முதலியாண்டானுக்குத் தனியாக விக்ரஹப்பதிஷ்டையில்லை. எதிராசனாருடைய முக்கோலிலும் திருவடி நிலைகளிலும் அவர் பொலிந்து நிற்கிறார், முதலியாண்டான் யதிராஜருக்கு த்ரிதண்டமாகவும் பாதுகமாகவும் ஆயினர் என்பதன் உண்மையை இங்கு கண்கூடாகக் காணலாம். உடையவரின் த்ரிதண்டத்தை அர்ச்சகர்கள் தவிர இங்கு வேறு யாரும் கையால் தீண்டுவதில்லை என்பதும் அறியத்தக்கது. இளையாழ்வார் என்று வ்யவஹரிக்கப்படும் மூலமூர்த்திக்கும், ஸ்வாமி (ராமாநுஜர்) என்று வ்யவஹரிக்கப்படும் உத்ஸவமூர்த்திக்கும் இங்கு பொதுவாக ஒரே த்ரிதண்டமேயுள்ளது. இரண்டு மூர்த்திகளும் ஒன்றாகக் கருவறையிலுள்ளபோது த்ரிதண்டம் இளையாழ்வார் திருமேனியில்; ஸ்வாமி வெளியில் எழுந்தருளுகையில் அவரிடம் எழுந்தருளப் பண்ணுவது முறையாகக் காண்கிறது.

திருநாராயணபுரத்திலும் முதலியாண்டானுக்குத் தனியாக விக்ரஹப்ரதிஷ்டை இல்லை. எதிராசனார் இங்கு தமது வருஷதிருநக்ஷத்ரமான (பிறந்தநாள்) சித்திரையில் செய்ய திருவாதிரையை ஆழ்வானுடனும் ஆண்டானுடனும் கொண்டாடுகிறார். பாதுகா த்ரிதண்டங்களே ஆண்டான். ஆழ்வானும் அன்று எழுந்தருளி ஸ்வாமியுடன் திருமஞ்சனம் முதலியன கண்டருளுகிறார். மறுதினம் முதலியாண்டான் திருநக்ஷத்ரம் ஸ்வாமியால் விலக்ஷணமாகக் கொண்டாடப்படுகிறது. உடையவர் தம்மைவிட்டுப் பிரியாத த்ரிதண்ட பாதுகைகளோடு திருமஞ்சனம் கண்டருளி "முதலியாண்டான் சாற்றுமறை" யும் நடந்தேறுகிறது.

RangaRakes
tamilnavarasam.com

இனி, ஒருவரே விஷ்ணுரூபமாய் மதிக்கத்தக்க துணையான த்ரிதண்டமாகவும், அத்யந்த பரதந்த்ரமான பாதுகையாகவும் எப்படி உறவு ஆக முடியும் என்று கேள்வி எழும். இளையபெருமாள் "**அஹமஸ்ய வரோ ப்ராதா குணைர்தாஸ்யமுபாகத:**" என்று அநுமனுக்குச் சொன்ன வார்த்தை இக்கேள்விக்கு விடை அளிக்கிறது. "பெருமாள் என்னைத் தமது தம்பியாக எண்ணியிருப்பர்; நான் அவர் குணங்களுக்குத் தோற்று அவரின் அடிமையாக எண்ணியுள்ளேன்" என்பது இளையோன் வாக்கு). ஸ்வாமி திருவுள்ளத்தாலே முக்கோல் என்றும் ஆண்டான் திருவுள்ளத்தாலே பாதுகை என்றும் கொள்க.

வேதாந்த தேசிகர் தமது யதிராஜ ஸப்ததியில்(32) "விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத் வேத்ரஸாரஸ் த்ரிதண்ட:" என்று ஸாதித்துள்ளார். எம்பெருமானாரை சேனை முதலியாரின் அவதாரமாக 6000-படி குருபரம்பரா ப்ரபாவத்திலும் பேசப்பட்டுள்ளது. சேனையர்கோனின் கைப்பிரம்பு யதீஸ்வரர் கையில் த்ரிதண்டமாயிற்று என்னப்பட்டது. எம்பெருமானார் திருவரங்கச் செல்வனின் நியமனப்படி திக்விஜய யாத்திரை எழுந்தருளியபோது ஆழ்வானை உசாத்துணையாக அழைத்துச் சென்றதாகவும் முதலியாண்டானை ஸ்ரீரங்க ஸ்ரீயை பாதுகாக்கும்படி விட்டுச் சென்றதாகவும் **கோயிலொழுகு** என்ற வரலாற்று நூல் கூறும். அப்போது சேனை முதலியாருடைய செங்கோல் முதலியாண்டானுக்கு வரிசையாகத் தரப்பட்டதாகவும் அறிகிறோம். சேனை முதல்வருடைய செங்கோலைக் கையிலேந்தித் திருவரங்கத்தில் இவர் அரசாண்டதால் **முதலியாண்டான்** ஆயினர். "வேத்ரஸார: த்ரிதண்ட:" என்கையால் இவரேந்திய செங்கோல் யதிபதியின் த்ரிதண்டமே.



இவ்விரண்டும் யதிபதியின் த்ரிதண்டமானதாலே இரண்டுமான சேர்த்தி ஸ்ரீரங்கஸ்ரீயை மங்காமல் ரக்ஷித்தது மிகப்பொருத்தமே.

திருமழிசைப்பிரான் திருச்சந்தவிருத்தத்தில் (52) "மூங்கில் மூன்றுதண்டர் ஒன்றினர்; அற்றபற்றர் சுற்றிவாழும் அந்தணீரரங்கமே" என்று பற்றற்று பகவத் விஷயத்தில் ஒன்றிய முக்கோலேந்திய ஸந்யாஸிகள் பலர் திருவரங்கத்தில் வாழ்வதாகச் சொல்கிறார். இங்கு "**எதிர்த்த விரோதிவர்க்கத்தைத் தானே அழியச் செய்யவற்றாய், தனக்கு அழிவின்றிக்கே இருக்குமென்னுமத்தை நினைக்கிறார்**" என்று வியாக்யானம் பண்ணப் பட்டுள்ளது. எம்பெருமானாருடைய த்ரிதண்டத்தின் பெருமையைப் பேசும் தாடீபஞ்சகம், "**வேதாந்தஸார ஸுகதர்சந தீபதண்டா:**" என்றும், "**ஸத்வித்யாதீபதண்டம்**" என்றும், "**தத்தேராமாநுஜார்ய ப்ரதிகதகசிரோ வஜ்ரதண்டம் த்ரிதண்டம்**" என்றும் முழங்குகிறது. வேதாந்த விழுப்பொருளை யாவருக்கும் எளிதில் புலப்படும்படிச் செய்யும் ஒளிகொள் விளக்கு இது. மோக்ஷஸாதனமான வித்தையை ப்ரகாசப்படுத்துவதும் இதுவே. ராமாநுஜார்யர் ஏந்தியுள்ள த்ரிதண்டம் எதிர்வாதம் புரியும் துர்வாதிகளின் தலைகளைத்தகர்க்கும் வஜ்ரதண்டம் போன்றது.

> **வையம் குருடன்றோ மாமறையும் பொய்யன்றோ**
> **ஐயன் உரைத்தமிழாரறிவார்?—வையத்துக்கு**
> **ஊன்றுகோலெந்தை எதிராசனுத் தரித்த**
> **மூன்று கோல் காண்பதற்கு முன்.**

என்ற பாசுரமும் இக்கருத்தையே விளம்புகிறது. எதிராசன் முக்கோல் ஏந்துமுன் இருமறைகளின் (தமிழ், ஸம்ஸ்கிருதம்) உண்மையறிவைப் பெறாது உலகமே குருடாயிருந்ததாம். கலிகாலத்தில் தர்மம் நலிவுறும்

RangaRakes
tamilnavarasam.com

போது உலகுக்கு ஊன்றுகோலாகிறது தர்மஸம்ஸ்தாபநம் பண்ணும் எதிராசரின் இம்முக்கோல்.

எதிராசரின் த்ரிதண்டத்தின் பெருமைகளைச் சொன்ன முன் கூறியவையெல்லாம் எதிராசரையே சாரும் என்றாலும், இப்பெருமைகள் எதிவரனார் தமது த்ரிதண்டமாக மதித்திருந்த முதலியாண்டானுக்கும் பொருந்தும். உண்மையறிவை உலகிற்கு ஊட்டி, க்ருதயுகதர்மமான எம்பெருமானார் தரிசனத்தை நிலைநாட்டி, எதிரிகளை நிலைகலங்க வாட்டித் தாம் ஜயசீலராக அழிவின்றி விளங்கிய ஸ்வாமிக்கு முக்கோல் போல உறுதுணையாக நின்றவர் ஆண்டான். யதிபதியின் நியமனத்தைச் சிரமேற்கொண்டுத் தாமே இப்பணியை மேல்நாட்டில் சிறப்பாக நடத்தியவர் முதலியாண்டான். பேலூர் ப்ராந்தியத்தில் சமணர்களையும் இதரமதத்தினரையும் வாதில் வென்று திருத்தி அங்கு "பஞ்சநாராயணர்" என்று ஐந்து இடங்களில் எம்பெருமானை ப்ரதிஷ்டை பண்ணி திருக்கோயில்கள் அமைத்து தர்மத்தை நிலைநாட்டியது நமது பெருந்தகையான ஸ்வாமி முதலியாண்டான் என்று வரலாறு கூறும்.

ஆக, எதிராசருடன் திருவடி நிலை (பாதுகை), உடன் பிறந்தாள் மகன் (பாகிநேயர்-மருமகன்), முக்கோல் (த்ரிதண்டம்) என்ற - மூன்று வகை உறவுகளால் மிக நெருக்கமுற்று பெருமை பெற்றது முதலியாண்டானுக்குப் போல மற்றொருவருக்கும் அமையவில்லை. உலகத்தவர் பேணிப் போற்றுவது எம்பெருமானார் ஸம்பந்தத்தை. ஆசார்யர்கள் தமது சிஷ்யர்களைத் திருவிலச்சினை முதலான பஞ்சஸம்ஸ்காரங்களாலும் தூய்மைப் படுத்தி ஞானஜந்மாவைத் தந்து

RangaRakes



"ராமாநுஜீயோஸி..." என்று வாழ்த்துகின்றனர். கிடாம்பி யாச்சான் சோலைமலை அழகரிடம் "அகதிம் சரணாகதம்" என்று விண்ணப்பிக்க, "நம்மிராமாநுசனை அடைந்து வைத்தும் "அகதி" என்று சொல்வதே" என்று வருந்தியதாக ஐதிஹ்யமுண்டு. இப்படி அனைத்துலகும் வாழப் பிறந்த எதிராசமாமுனிவர் முதலியாண்டானுடைய உறவை விரும்பி விடாமல் பேணினார் என்றால், இவருடைய பெருமையை எப்படிப் பேசித் தலைக்கட்ட முடியும்? எல்லாம் துறந்த யதிராஜரையும் தமது சிறந்த குணங்களால் மகிழ்வித்துக் கவர்ந்தவரன்றோ ஸ்வாமி முதலியாண்டான்!

## 4. வாழ்க்கைச் சரித்திரம்

"அஜஹத்பாகிநேயத்வம் பாதுகாத்வம் த்ரிதண்டதாம்" என்கிற ச்லோகத்திலே கண்டபடியே நமதண்ணல் முதலியாண்டான், எதிராசருக்கு மூன்றுவித உறவாக அமைந்த பெருமையைப்பற்றிப் பேசி அநுபவித்தோம். இவ்வநுபவங்களில் முதலியாண்டானின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பல தொடப்பட்டன. ஆயினும், "பிறந்தவாறும் வளர்ந்தவாறும் என்கிற கிரமத்தில் இவருடைய வாழ்க்கை வரலாற்றை அநுபவிக்க, ப்ராப்தமாகிறது இப்போது.

ராமாநுஜருக்கு உடன்பிறந்த இருவரில் மூத்தவர் நாச்சியாரம்மை (கோதாம்பிகா); இளையவர் கமலை. இவர்களில் முதல்வர் காஞ்சிபுரத்திற்குக் கிழ்த்திசையில் திருமழிசைக்கு அருகிலுள்ள புருஷமங்கலம் அநந்தநாராயண தீக்ஷிதர் என்கிற அந்தண நல்லார் ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டிருந்தனர். பச்சைவாரணப் பெருமாள் கோவில் என்று இங்கு கோவில் கொண்டுள்ள பெருமாள் பெயரையிட்டு வழங்கப்படும் இவ்வூர்,

tamilnavarasam.com

இப்போது நாஜரத்பேட்டை என்றே யாவராலும் அறியப்பட்டதாயுள்ளது. யஜுர்வேதியான தீக்ஷிதர், வாதூல கோத்ரத்தைச் சேர்ந்தவர். திருமணமாகிப் பல ஆண்டுகள் ஸந்ததி ஏற்படாததனால் குறைபாடுற்ற தீக்ஷிதர் மகப்பேற்றை வரமாக வேண்டித் தம் மனையாளுடன் திருவேங்கட யாத்திரையை மேற்கொண்டு வழியில் திருநின்றவூரில் ஓரிரவு தங்கி ஏரிகாத்த ராமபிரான் ஸந்நிதியில் உறங்கும்போது, அப்பெருமானே இவர் கனவில் தோன்றி, நீர் திருவேங்கடம் செல்ல வேண்டா; நாமே உமக்கு மகனாக வந்து பிறப்போம் என்று சொல்லி மறைந்தனன். உறக்கம் நீங்கப்பெற்ற அவ்வேதியர், பெருமகிழ்ச்சி கொண்டு, கனவில் நிகழ்ந்ததைத் தம் மனைவியிடம் சொல்லி, மேலே செல்லாமல் தமது ஊரையே சென்றடைந்தனர்.

நாளடைவில் அவர் கண்ட கனவு நனவாய்த் தலைக்கட்டிற்று.

அநந்தநாராயண கோதாம்பிகா கர்ப்பஸம்பவம்।
பாகிநேயம் யதீந்த்ரஸ்ய பஜே தாசரதிம் குரும்॥
மேஷே புநர்வஸூதிநே தாசரத்யம்ச ஸம்பவம்।
யதீந்த்ரபாதுகாபிக்யம் வந்தே தாசரதிம் குரும்॥

என்றும் சொல்லுகிறபடியே, சக்ரவர்த்தித் திருமகனின் அம்சமாய் அவ்வெம்பெருமானவதரித்த சித்திரையில் புநர்வஸு நல் நாளில் (குரோதந வருடம் A.D.) யதீந்த்ர்பாகிநேயரான முதலியாண்டான் அநந்த நாராயணருக்கும், கோதாம்பிகைக்கும், அன்புமகனாக ஸகல சுபலக்ஷணங்களும் வாய்க்கப்பெற்று வந்து அவதரித்தார். மாத நக்ஷத்ரப் பொருத்தத்தை யொட்டி இவருக்கு தாசரதி என்றே திருநாமம் சூட்டப்பட்டது இவருடைய பெற்றோர்களால்.



ஸ்ரீராமாம்ச ஸமாவிஷ்டம் பாஞ்சஜந்யாம்ச ஸம்பவம்
பஞ்சநாராயண ஸ்தாந ஸ்தாபகம் குருமாச்ரயே

என்று இவர் போற்றப்படுவதிலிருந்து இவர் எம்பெருமானின் சங்கமான பாஞ்சஜந்யாழ்வாரின் அம்சமாய்ப் பிறந்தவர் என்றும், இவரிடம் ராமபிரான் ஆவேசித்து யதிராஜருக்கு அந்தரங்க கைங்கரியங்களைச் செய்து உகந்தனன் என்றும் அறியலாம். (பரதாம்சம் என்று பெரிய திருமுடியடைவு எனும் நூலில் சொல்கிறது).

தகப்பனார் மகனுக்குச் செய்விக்க வேண்டிய வைதிக ஸம்ஸ்காரங்களான நாமகரணம், சௌளம், உபநயனம் முதலானவைகளை உரியகாலங்களில் நடத்திவைத்து, பிள்ளைக்கு நல்ல வைதிக வித்யையும் புகட்டினார். திராவிடம், ஸம்ஸ்க்ருதம் இருமொழிகளிலும் இவருக்கு விசேஷமான புலமை உண்டு என்பதை அருளிச்செயல் வியாக்கியானங்களில் இவருடைய நிர்வாஹங்களாகக் காட்டப்பட்டுள்ளவை மூலமாக அறியலாம். பின்னர் திருமணமுமாகித் தம்மூரிலேயே இவர் வாழ்ந்து வருங்கால் தாய்மாமனான இளையாழ்வார் துறவுபூண்டு பெருமாள்கோவிலில் ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யராய்ப் பொலிவுற்று விளங்குவதறிந்து, அவரையடைந்து, அவரிடமே பஞ்சஸம்ஸ்காரங்களை யாசித்துப்பெற்று, அவரைவிட்டுப்பிரியாமல் குற்றவேல் புரிந்து கொண்டு, கற்கவேண்டியவை யாவற்றையும் கற்று அவருக்கு வலக்கைபோல அணுக்கராய் வாழ்ந்துவரலானார். இப்படி ராமாநுஜ முனிவரிடம் முதல்முதலில் சிஷ்யர்களாக ஆச்ரயித்தவர்கள் வாதூலகுலதிலகரான முதலியாண்டானும் ஹாரீதகுலதிலகரான கூரத்தாழ்வானுமே அவர்.

RangaRakes
tamilnavarasam.com

அக்காலத்தில் திருவரங்கத்தில் ஆளவந்தார் அலங்கரித்திருந்த ஆசார்ய பீடத்தில் ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவருக்கும் தலைவராய் அமரும்படி ராமாநுஜர் காஞ்சியிலிருந்து ஸ்ரீரங்கம் அழைத்துச் செல்லப்பட்ட போது, ஸ்வாமியின் திருவாராதனமான பேரருளாளனை எழுந்தருளப் பண்ணிகொண்டு ஆழ்வானும் ஆண்டானும் உடன் சென்றனர். அன்றையிலிருந்து இவ்விருவர்க்கும் திருவரங்கமே இருப்பிடமான ஊராயிற்று இராமாநுஜருடைய வாழ்க்கை வரலாற்றில் இவர்களுடைய வரலாறும் ஒன்றிவிட்டது. வரலாற்றுநூல்களிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது-ஸ்ரீவைஷ்ணவதர்சந நிர்வாஹத்திற்கு ஆழ்வானை அதிகமாக உசாத் துணையாகக் கொண்டார் ஸ்வாமி எம்பெருமானார். ஆழ்வானிடம் ஸ்வாமிக்கு ஒரு வித்வத்பக்ஷபாதம் இருந்தது. முதலியாண்டானைத் தமது அந்தரங்க ஸங்கர்யங்களுக்கு உதவிகொண்டார். கோவில் நிர்வாஹத்தில் ஆண்டானுடைய பணி அதிகமாகப் பயன் படுத்தப்பட்டது. இதிலிருந்து இவருடைய ஆளுந்திறன் (administrative skill) மெச்சத் தக்கதொன்று என்று தெரிகிறது, இதனால் ஆண்டான் என்ற திருநாமமும் இவருக்கு மிகப் பொருத்தமுடையதாகிறது.

"எம்பெருமானார் அரங்கேசனின் நியமனப்படி திக்விஜ யாத்ரையாக எழுந்தருளின போது ஆழ்வானை யாத்ராஸஹாயராக்கி, ஆண்டானைக் கோவில் ஸ்ரீகார்ய நிர்வாஹகராக்கி அவருக்குச் செங்கோல் ப்ரஸாதிக்கும்படி பெருமாள் ஸன்னிதியில் விண்ணப்பம் செய்தாராம் ஸ்வாமி. அப்போது பெருமாளும் போர உகந்தருளி, 'உமக்குப் பாதுகையான தாசரதி நம் வீட்டை ஆராயக்கடவர்; நீர் நம் தர்சநத்தில் களையறுத்து 'எம்பெருமானார் தர்சநமே ஸர்வோத்க்ருஷ்டம்' என்று



நாலுதிசையிலும் ஜயஸ்தம்பம் நாட்டிவாரும்' என்று விடை ஸாதித்து முதலியாண்டானுக்குச் செங்கோல் வரிசையும் ப்ரஸாதித்தருளினார். இப்படி நியமனம் பெற்ற முதலியாண்டானும் குறட்டிலே இருந்து கோவில் கார்யத்தையும், உள்ளே கருவுலக வாசலிலே இருந்து திருப்பவள உபசாரங்களையும் ஆராய்ந்து கொண்டு, அனைத்தழகும் கண்டருளப் பண்ணிக் கொண்டிருந்தார். திக்விஜயம் பண்ணி உடையவர் திரும்பவும் எழுந்தருளியபோது, முதலியாண்டான் திருவரங்கச் செல்வத்தைச் சிந்தாமே மங்காமே த்விகுணமாக வர்த்திப்பித்துக் கொண்டு (ஒரு குறையும் வீணும் இல்லாமல் இருமடங்காக வளர்த்து) அனைத்தழகும் நடத்திவைத்த படியைக் கண்டு உகந்து, அவரையே ஸ்ரீகார்யத்தில் தொடரும்படி நியமித்தருளினார்." (இது கோயிலொழுகு என்னும் ஸ்ரீரங்கம் கோவிலைப் பற்றிய வரலாற்றுநூலில் காணும் விஷயம்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் சோழ அரசன் கொடுமைக்குப் பயந்து இராமாநுஜர் ஸ்ரீரங்கத்தை விட்டு மேல்நாட்டிற்கு எழுந்தருளியபோது முதலியாண்டானைத் தம்முடன் அழைத்துச்சென்றார். அங்கு ஓர் ஊரில் இருந்த சமணர்களைத் திருத்த அவர்கள் நீரெடுக்கும் ஊருணியில் முதலியாண்டானைத் தமது திருவடிகளை விளக்கி வரச் (அலம்பி வரும்படி) சொல்ல, இவரும் அப்படியே செய்தார். "தத்பாதாம்பு அதுலம் தீர்த்தம்" என்கிறபடி அந்த நீர் ஒப்பற்ற ஸ்ரீபாததீர்த்தமானபடியால் அதைப் பருகிய அவ்வூரார் அனைவருக்கும் மனத்தூய்மைபெற்று ராமாநுஜர் திருவடிகளில் வந்து பணிந்தனர். அன்று தொட்டு அவ்வூர் ஸ்ரீசாளக்கிராமம் என்று அழைக்கப் படுகிறது. அங்கு நரசிங்கப் பெருமாளும், உடையவர், முதலியாண்டான் இவர்களுடன் கோயில் கொண்டெழுந்

RangaRakes
tamilnavarasam.com

அருளியுள்ளான். அந்தப் புனிதத்தலத்தில் "முதலியாண்டான் ஸ்ரீபாததீர்த்த"த்திற்கு இன்றும் திருவாராதனம் நடக்கிறது.

இதற்குப் பின்னரே எம்பெருமானார் திருநாராயணபுரம் என்ற புதிய ஊரை உண்டாக்கி அங்கே திருநாராயணனையும் செல்வப்பிள்ளையையும் கோவில் கட்டி ப்ரதிஷ்டை பண்ணியது. அந்த ப்ராந்த்யத்தில் இருந்த புறச்சமயிகளை வாதில் வென்று திருத்தும் பணியை முதலியாண்டானிடம் ஒப்படைத்தார் ஸ்வாமி ராமானுஜர். அந்த நியமனத்தைச் சிரமேற்கொண்டு பேலூர் என்னும் ஊருக்குச் சென்று அங்குள்ள சமணர்களைத் திருத்தி இராமானுசனடியார்களாக ஆக்கி, அங்கு ஐந்து ஊர்களில் எம்பெருமானுக்குத் திருக்கோயில்களை கட்டுவித்தார். "ஸ்ரீராமாம்ச..." தனியனில் பஞ்சநாராயணஸ்த்தாந ஸ்தாபகராக முதலியாண்டான் போற்றப்படுவது இதையொட்டியே. பேலூரில் கேசவநாராயணன், தொண்டனூரில் ஸ்ரீமந் நாராயணன், விஜயபுரத்தில் விஜயநாராயணன், கதுகலத்தில் வீரநாராயணன், தழைக்காட்டில் கீர்த்திநாராயணன் (வாழ்புகழ் நாரணன்) என்று ஐந்து நாராயண ஸ்தாநங்களையும் திருநாமங்களையும் கண்டுகொள்க.

இதன் பின்னர் அச்சோழவரசன் கழுத்தில் புண்கண்டு புழுவனாகிமாள, ஆண்டானுடன் உடையவர் திருவரங்கம் திரும்பினார். அப்போதைய சோழ அரசன் (க்ருமிகண்டனின் மகன்) திருவரங்கம் திருப்பதியை ராமாநுஜருக்குத் தானமாகத் தந்து தானும் திருவடிகளில் ஆச்ரயிக்க விரும்ப, உடையவரும் மகிழ்ந்து அவ்வரசனை ஆண்டான் திருவடிகளில் ஆச்ரயிக்கும்படி நியமித்துத் திருவரங்கம் திருப்பதியை அவருக்கு



(முதலியாண்டானுக்கு) தாராபூர்வமாக (நீர் வார்த்துக் கொடுத்து) தான் சாஸனம் பண்ணுவித்து இந்த நிகழ்ச்சியை ஆரியபடாள் வாசலிலே சிலாலிகிதம் (கல்வெட்டு) பண்ணுவித்தார். உடையவரும் முன்பு போல ஆண்டானைக்கொண்டு கோவில் ஸ்ரீகார்யங்கள் நடத்தியருளினார்.

## 5. அர்ச்சாவதாரத்தில் ஈடுபாடு

எம்பெருமானாரின் நியமனத்தினால் முதலியாண்டான் நம்பெருமாளின் திருமேனி உபசாரத்தையும் திருப்பவள உபசாரத்தையும் ஆராய்ந்து நடத்துகையிலே, திருப்பாணரால் "கோவலனாய் வெண்ணையுண்ட வாயன்" என எண்ணப்பட்டமையால் கண்ணனான இவருக்கு நாவல் பழம் புசிப்பதில் அதிக ஆசையுண்டு என்று நல்ல ஏட்டுத் தயிர் சேர்த்துக் கலந்த தத்யோதநத்தையும் நல்ல கனிந்த நாவல் பழங்களையும் அமுது செய்விக்கப் பண்ணினார். அன்று உடையவர் நம்பெருமாளைத் திருவடி தொழுதபோது பெருமாள் திருமுகம் வாடியிருக்கக் கண்டு, "பெருமாள் என்ன அமுது செய்தார்?" என்று விசாரித்தவளவில், தத்யோதனத்துடன் நாவல் பழம் அமுது செய்ததால்தான் முகவாட்டம் என்று கண்டு இப்படி அமுது செய்வித்த ஆண்டானை முனிந்தார். கருடவாஹன பண்டிதர் என்னும் வைத்தியரை அழைத்து பெருமாளுக்கு கஷாயமிட்டுச் சிகித்ஸை பண்ண பெருமாளும் பண்டு போல ஸேவை ஸாதித்தார். இதனால் அர்ச்சாவதாரத்தில் எம்பெருமானின் பூர்ண ஸாந்நித்யத்தையும் அங்குத்தை ஸௌகுமார்யத்தையும் ப்ரத்யக்ஷமாக் கண்டறிந்த ஆண்டான், அங்கு அதிகமான பரிவையுடையவர் ஆனார். (இந்தச் சரித்திரம் கோயிலொழுகில் காணலாம்; உடையவரின் திக்விஜயத்திரைக்கு முன்னர் நடந்தது).

RangaRakes tamilnavarasam.com

திருவாய்மொழியில் (3-6-9), "நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள் கடல் வண்ணனே" என்ற சொற்றொடருக்கு ஏனைய ஆசார்யர்களும், "நெஞ்சினால் நினைப்பான் யவன் நீள்கடல் வண்ணன் அவனாகும்" என்று அந்வயித்துப் (பதங்களைச் சேர்த்து) பொருள் கொண்டனர். நெஞ்சினால் நினைப்பான் என்றது பக்தன் தன் ருசிக்கேற்ப ஏற்றியமைத்துப் பூசிக்கும் அர்ச்சையான எம்பெருமானை நீள் கடல் வண்ணன் அவன் ஆகும் - அதாவது பரமபுருஷன் அந்த அர்ச்சா வடிவில் தன்னை அமைத்துக் கொள்கிறான் என்றபடி. 'நெஞ்சினால் நினைப்பான் யவன் அவன் நீள்கடல் வண்ணனாகும்' என்று அந்வயித்துப் பொருள் கூறுவர் முதலியாண்டான் பக்தன் ஏறியருளப்பண்ணிய அர்ச்சை எம்பெருமான் நீள்கடல் வண்ணனான பரம புருஷன் ஆகும் என்றபடி. நம்மால் அமைக்கப்பட்ட திருமேனிதானே என்ற எண்ணத்தில் அர்ச்சா விஷயத்தில் கூடாது. இது பரம புருஷனுடைய பஞ்சோப நிஷன்மயமான அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹம் என்றுப் போற்ற வேண்டும். அங்குத்தைக்கு (பரமபதத்தில் இருப்புக்கு) உகந்தருளின விடத்தை (உகந்து வர்த்திக்கும் நிலையான அர்ச்சையை) விபூதியாக (ஸொத்தாக) நினையாதே, இங்குத்தைக்கு அவ்விடத்தை (பரமபதத்தை விபூதியாக நினையுங்கோள்" என்பது முதலியாண்டான் ஸ்ரீஸூக்தி. குணபூர்த்தி உள்ள இடம் (குணங்கள் முழுமையாக விளங்குமிடம்) அர்ச்சா அவதாரமே இதுவே மேன்மையுடைத்து ஆதலால் பலகுணங்களுக்கு ப்ரகாசமில்லாமல் உள்ள பரம்பத நாதன் குறைந்தவனே ஆகையால் பரமபதத்திலிருப்பு அர்ச்சைக்கு சேஷமாயிருக்கு மென்பது ஆண்டானின் துணிவு. அர்ச்சாவதார எம்பெருமானைப் பூர்ணாவதாரமாக





எண்ணிப் போற்றுபவனே உண்மை: ஸ்ரீவைஷ்ணவன் என்பர் நமது ஆண்டான். அம்சமாக அல்லாமல் முழுமையாக அர்ச்சையில் எம்பெருமான் உளன் என்ற திடமான நம்பிக்கை அவசியம் வேண்டும்.

முதலியாண்டான் எம்பெருமானாரை உய்வுக்கு உபாயமாகவும், உபேயமாகவும் கொண்டவர் ஆயினும் கூடவே எம்பெருமானின் பொருந்த விட்ட திருவடிகளை உபாயமாகவும் திருமேனியை உபேயமாகவும் கொண்டிருப்பர். பெருமாள் திருக்கையில் திவ்யாயுத ஆழ்வார்களை உடையவரில்லாதபோது உசாத்துணை யாகப் பற்றி இருப்பாராம் ஆண்டான். இதற்கு காரணம்; எம்பெருமானைத் தவிர வேறு எதையும் வேண்டாத அநந்யப்ரயோஜனரான பாகவதர் இந்த ஞாலத்தில் கிடைக்க மாட்டார்கள். ப்ரபந்நனுடைய "எம்பெருமானே ரக்ஷகன்" என்ற துணிவை (அத்யவஸாயத்தை) எப்பொருளும் கிட்டாத பஞ்சகாலத்தில்தான் காணமுடியும்; இவன் கைமாண்டு கிடக்கையாலே, இவனநுஷ்டானத்தை விசேஷ நாட்களில் மட்டுமே காணமுடியும். அநந்ய ப்ரயோஜன அதிகாரிகளை நித்யஸூரிகள் நடுவிலேதான் காணமுடியும். அதனால் திவ்யாயுதாழ்வார்களை உசாத்துணையாகக் கொண்டிருப் பாராம் ஆண்டான்.

அடியார்கள் அநுபவித்து மகிழ்வதற்கென்றே அர்ச்சாவதார எம்பெருமான் பல உத்ஸவங்களைக் கண்டருளுகிறான். உத்ஸவம் என்னும் சொல்லே மகிழ்வளிப்பது என்ற பொருளுடைத்து. அர்ச்சையில் மட்டற்ற பரிவுடைய பக்தர்களுக்கோ, 'என்ன நேருமோ' என்ற பயமே அதிகமாக இருக்கும். அடியார் குழாம் எனப்படும் கூட்டத்தில் மெய்யடியார்கள் மிகச் சிலரே.

'நான், எனது' என்ற எண்ணத்தில் ஊன்றிய ஸம்ஸாரிகளே அதிகம்.

அர்ச்சக பராதீனனாய்த் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளாமல் எதற்கும் பிறர் கையை எதிர்பார்க்கும் நிலையான இந்த அர்ச்சா நிலையில் உள்ள எம்பெருமான் பரம ஸுகுமாரமான திருமேனியுடன் துஷ்டர் பலர் கண்ணுக்கும் இலக்காகி உலாவுகிறான் "அவத்தங்கள் விளையும் என்சொற்கொள் அந்தோ!" என்று நம்மாழ்வார் தலைமகளாக இருந்து கண்ணனை பசுமேய்க்கப் போகவேண்டாம் என்று தடுக்கிறார். இங்கு பரிவினால் தடுப்பார்யாருமில்லை. தீய புத்திக்கஞ்சனேவிய அசுரர்களையொத்த ஸம்ஸாரிகள் நடுவே பவனி வருகிறான். இப்படி பத்து நாட்கள் பிரம்மோத்ஸவம் கண்டருளித்தீர்த்வாரியாகி கருவரையின் காப்பிற்குள் சென்றான் திருவரங்கன். ஒரு சமயம், ஒரு ஆபத்தும் நேராமல் நம்பெருமாள் பத்திரமாக ஸ்வஸ்தானம் சேர்ந்தது கண்டு மட்டற்ற மகிழ்ச்சி ஆண்டானுக்கு தன்னைப் போல பரிவரான எம்பாரைக் கண்டார். இருவரும் ஒருவரையொருவர் தண்டனிட்டுத் தழுவிக் கொண்டனராம் தம் மகிழ்ச்சிக்கு போக்கு வீடாக. அஹங்கார மமகார தூஷிதராயிருப்பார் பத்துக்கோடிப்பேர் நடுவே அதிஸுகுமாரமான திருமேனியைக் கொண்டு பத்து நாள் (வெளியில்) எழுந்தருளி அபாயமின்றி ஆஸ்தானத்துக்கு எழுந்தருளித் தப்பினபடி கண்டீரே!" என்று இருவரும் நெஞ்சின் அடித்தளத்திலிருந்து உணர்ச்சியுடன் சொல்லித் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்ததை நஞ்சீயர் நேரில் கண்டு சொன்னதாக ஐதிஹ்யம் காண்கிறோம். இவர்களுடைய நிலையை வன்னெஞ்சர்களான நம்போல்வார் புரிந்து கொள்ளவே முடியாது.



## 6. ஆத்ம குணபூர்த்தி

யதிபதியான ராமாநுஜருக்கு முதலியாண்டான் மூன்று வித உறவுகளால் நெருங்கி இருந்ததை விளக்குகையில், அவருடைய குணபூர்த்தி ஒருவிதமாகச் சுருக்கிப் பேசப்பட்டது. இப்போது இவ்விஷயத்தை விரிவாக அநுபவிக்க ப்ராப்தமாகிறது.

ஸ்வாமி எம்பெருமானார் முதலியாண்டானைப் பிரியாத் துணையான த்ரிதண்டமாகவும் கூரத்தாழ்வானைத் தூய்மை தரும் பவித்திரமாகவும் மதித்திருந்தார் என்பது பலமுறை பேசப்பட்டுள்ளது. திருக்கோட்டியூர் நம்பியிடம் 18தடவை (திருவரங்கத்திலிருந்து) நடந்து, இவர்(சிஷ்யர்) அத்யவஸாயத்தை அறிய அவர் (குரு) இட்ட சோதனைக்கெல்லாம் உட்பட்டு, கடைசியில் ஸௌம்ய நாராயணன் ஸந்நிதியில் மாஸோபவாஸமிருந்து தண்டும் பவித்ரமுமாய் (ஆண்டான், ஆழ்வான் இவர்களுடன்) திருமந்த்ரார்த்தத்தை உபதேசமாகப் பெற்றதாக 6000-ப்படி குருபரம்பராப்ரபாவத்தில் சரித்திரம் காணப்படுகிறது.

சிஷ்யன் மிகவும் உயர்ந்த அர்த்தத்தைப் பெற அருகதை உள்ளவனா? அவனுக்கு இதைப்பெற ஆழ்ந்த அவா உள்ளதா? அதைப்பெற்று அந்த அர்த்தத்தை வாழ்க்கையில் கடைப்பிடிக்கக் கூடியவனா? அதனால் பயன் பெறமுடியும் என்ற திடமான நம்பிக்கையும், ஆதரமும் இவன் பாலுள்ளதா? அதைப் பெற்றாலல்லது தரிக்க முடியாது என்ற நிலை இவன்பால் உள்ளதா? என்றெல்லாம் சோதிப்பது அக்காலத்தில் மரபாய் இருந்தது. இராமாநுஜரை திருக்கோட்டியூர் நம்பி 18 தடவை ஸ்ரீரங்கத்திலிருந்து திருக்கோட்டியூருக்கு நடக்கும்படி பண்ணினார். இவர் அவதார புருஷர் என்பது நம்பி

RangaRakes
tamilnavarasam.com

அறியாததல்ல. ஸ்ரீரங்கநாதனும் அர்த்தத்தை இவருக்குச் சொல்லும்படி நியமித்ததாக அறிகிறோம். ஆயினும் அவர் அர்த்த கௌரவத்தைப் பார்த்தாரேயன்றி வேறெதையும் பார்க்காமல் இராமாநுஜரை வெகுவாக சோதித்துத் தம்மைத்தாம் த்ருப்திபடுத்திக் கொண்டே அவருக்கு ரஹஸ்யத்தை உபதேசித்தார்.

உடையவரையே கடுமையான சோதனைக்கு உள்ளாக்கிய நம்பி ஆண்டானுக்கும் ஆழ்வானுக்கும் ஒரு சோதனையுமில்லாமல் உபதேசிப்பரா? என்பது விமர்சனத்திற்குரியது. மேலும் இப்படி உபதேசிக்கப்பட்ட பொருள் திருமந்த்ரார்த்தம் என்னப்படுகிறது. ஸ்ரீவசனபூஷணத்தில் (ஸூ. 316) நேரே ஆசாரியன் என்பது பெரிய திருமந்திரத்தை உபதேசிப்பவனையே என்று ஸ்பஷ்டமாக அருளிச் செய்யப்பட்டுள்ளது. தேவப்பெருமாளின் நியமனப்படி ராமாநுஜர் ஸாக்ஷாதாசார்யனாய் வரித்தது பெரியநம்பியையே. ஆகையால் திருமந்த்ரத்தையும் த்வயத்தையும் (அம்மந்திரங்களின் உட்கருத்துக்களையும்) அவரே உடையவருக்கு உபதேசித்திருக்கவேண்டும்.

பொய்யிலாதவரும், ப்ரமாணங்களினின்றும் சிறிதும் வழுவாதவருமான நம் மணவாளமாமுனிகள் தமது முமுக்ஷுப்படி வியாக்யானத்தில் சரமஶ்லோகப்ரகரணத்தின் அவதாரிகையில் உடையவர் சரமஶ்லோகத்தினர்த்தத்தை உபதேசமாகப் பெறும் பொருட்டே திருக்கோட்டியூருக்கு 18முறை எழுந்தருளியதாக ஸ்பஷ்டமாக அருளிச் செய்துள்ளார். இங்கு ஆண்டானையும் ஆழ்வானையும் பற்றி ப்ரஸ்தாபமே இல்லை. 6000-ப்படியிலும் இவர்களுக்கு சரம ஶ்லோகார்த்தம் கிடைத்தது வேறுவிதமாகப் பேசப்பட்டுள்ளது. யதிராஜருடைய வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சியைத் தெளிவாக அறிய யதிபுநவதாரமான மாமுனிகளின் வாக்கு பரமப்ரமாணம் என்று கொள்ளல் அவசியம்.

சரமச்லோகார்த்தத்தை நம்பியிடமிருந்து பெற்ற உடையவர் அவ்வர்த்தத்தை கூரத்தாழ்வானுக்கு உபதேசிக்க அநுமதி கேட்ட போது, ஆழ்வானின் அத்யவஸாயத்தைச் சோதித்து ஓராண்டு அவரிடம் பலவிதமான கைங்கர்யங்கள் கொண்டு உபதேசிக்கும்படி அநுமதிதந்ததாகவும், ஆழ்வான் அக்கால விளம்பத்தைப் பொறாமல் ஒருமாதம் ஆசாரியஸந்நிதியில் பட்டினி கிடந்து தமது அத்யவஸாயத்தை நிரூபித்து உபதேசம் பெற்றதாகவும் அறிகிறோம்.

முதலியாண்டான் இவர்த்தத்தைப் பெற்றவிதமே வேறு. முதலியாண்டான் யதிராஜரைச் சரமச்லோக அர்த்தத்தைத் தமக்கு உபதேசிக்கும்படி வேண்டியபோது, திருக்கோட்டியூர் நம்பியிடம் அநுமதி பெற்றுவரும்படி அனுப்பியதாக 6000-ப்படி கூறும். வார்த்தாமாலையில், முதலியாண்டானை அழைத்து நம்பியிடம் சென்று இவ்வர்த்தத்தை உபதேசமாகப் பெற்று வரும்படி நியமித்ததாகக் காண்கிறது. இது எப்படியாயினும், நம்பி ஆண்டானை ஆறு மாதம் காக்கவைத்து, "உமக்கு முக்குறும்பும்(வித்யை, குலம், தனம் இவற்றையடியாகக் கொண்ட பெருமையுணர்ச்சி) போனால் உமதாசாரியரே உபதேசிப்பார்; சென்று பெற்றுக் கொள்ளும்" என்று அனுப்பியதாக மேல் வரலாறு காண்கிறது. ஆண்டான் திரும்பவும் உடையவர் கோஷ்டிக்கு வந்த போது, அவரைக் கண்டதும் "நமது ஆண்டான் நம்பி ஸந்நிதியில் ஸ்வரூபசிக்ஷை பெற்று வந்தபடி காணீர்" என்று மகிழ்ந்து



RangaRakes tamilnavarasam.com

கூறி உடனே ரகஸ்யார்த்தத்தை உபதேசித்து, "இப்போதே நமக்குத் தண்டும் பவித்திரமும் கை புகுந்தது" என்று உவகையுடன் அருளிச்செய்ததாக அறிகிறோம். (தண்டும் பவித்திரமுமாகச் சென்று உபதேசம் பெற்றதாக 6000-ப் படியில் கண்டுள்ளபடி) நம்பியிடம் மூவருமாக உபதேசம் பெற்றிருந்தால் உடையவரின் மேல் சொன்ன வாக்கியத்திற்கு இடமில்லை.

ஆக, இவ்விமரிசனத்திலிருந்து, ராமாநுஜர் பலமுறை திருவரங்கத்திலிருந்து திருக்கோட்டியூருக்கு நடந்து, மற்றும் சோதனைக்குள்ளாகிப் பெற்ற அர்த்தம் ஸ்ரீகீதாசரமஶ்லோகத்தின் உட்பொருளே, என்றும் இப்பொருளைத்தாமே பின்னர் தன்னருமைச் சீடர்களான ஆழ்வானுக்கும் ஆண்டானுக்கும் வெவ்வேறு சமயங்களில் வெளியிட்டார் என்றும் முடிவு காணலாம்.

யதிராஜர் அளித்த பயிற்சியினால் ஏற்கெனவே ஆண்டான் எவ்வித பெருமையுணர்ச்சியும் அற்றவராக ஆசாரியனிட்ட வழக்காகவே இருந்தார் எனில் மிகையன்று. அன்றேல் ஞானவைராக்யநிதியான யதீந்த்ரருக்கு அணுக்கராயிருந்திருக்க முடியாது. நம்பியிடம் ஆறுமாதம் இருந்து திரும்பிய பிறகு தம்மையே அழித்து ஆசார்யனுக்குத் தொண்டராயிருக்கும் மனப்பான்மை இன்னும் வலுப்பெற்றது. இந்நிலையைப் பரீக்ஷித்த படிதான் அத்துழாயம்மைக்கு இவரைச் சீதன வெள்ளாட்டியாக அனுப்பியது என்று கொள்ளலாம். இப்பரீக்ஷையில் ஆண்டான் அமோகமான வெற்றி பெற்றதை நாம் காண்கிறோம்.

பெரியநம்பியின் குமாரத்தி அத்துழாய், அக்காலத்தில் பெண்ணைத் திருமணம் பண்ணித்தரும் போது ஒரு பணிப்பெண்ணையும் (தமது செலவில்)





சீதனமாக அனுப்புவது வழக்கமாம். பெரிய நம்பிக்கு இதற்கெல்லாம் வசதி இல்லை. ஒரு முறை அத்துழாயம்மை காவிரிக்கு நீராடப்போகும் போது தனது மாமியாரைத் துணை வரும்படி வேண்ட, "உன் பிறந்தகத்திலிருந்து அழைத்து வந்துள்ள சீதன வெள்ளாட்டியை அழைத்துப்போ" என்று மாமியார் இகழ்ச்சி தோற்றக் கூறக்கேட்டு, தகப்பனாரான நம்பியிடம் சென்று இதைச் சொல்லி வருந்தினார்.

இது கேட்ட நம்பி, "ஜீயரிடம் சென்று கேள்" என்று சொல்லிட, அத்துழாயும் தனது அண்ணனாக மதித்திருந்த ஜீயரிடம் சென்று முறையிட்டாள். இதைக் கேட்ட யதிபதி தமக்கணுக்கராயிருந்த முதலியாண்டானை அழைத்துக் காட்டி "இவரை உமது சீதன வெள்ளாட்டியாகக் கொண்டு போவீர்" என்று அனுப்பினார். ஆண்டானும் மறுபேச்சுச் சொல்லாமல், முகம் சுளிக்காமல், மனநிறைவுடன் அத்துழாயுடன் சென்று ஒரு பணிப்பெண் செய்ய வேண்டிய தொண்டுகளைச் செய்வதில் முனைந்தார். இதைக் கண்ட அத்துழாயின் புக்ககத்தினர் பயந்து ஆண்டானை அடிபணிந்து வேண்டியும் அவர் அப்பணிகளை விடாமல் செய்யப்புக, பெரிய நம்பியிடம் சென்று "பெருங்குலத்தோன்றலும் மகாவித்வானுமான முதலியாண்டானை வெள்ளாட்டியின் பணியைச் செய்ய ஏவி எங்களை நசிப்பிக்கலாமா? இது முறையோ?" என்று கேட்க, அவர் "நாமேதும் அறியோம்;" அவரை அனுப்பித்தந்த ஜீயரிடம் சென்று கேளுங்கள்" என்று சொல்லிவிட, அவர்களும் உடையவரிடம் சென்று கேட்க, அவரும் "ஆண்டானை நமது தங்கைக்குச் சீதன வெள்ளாட்டியாகத் தந்தாகி விட்டது. அவர் அங்கு வந்துத் தொண்டு செய்வது உங்களுக்கு விருப்ப

மில்லையாகில். இங்கிருந்தே செய்யட்டும்" என்று சொல்லி ஆண்டானை மடத்துக்கு அழைத்துக் கொண்டார்.

ஆசாரிய நியமனத்தைச் சிரமேற்கொண்டு யாருக்கும் எவ்விதத் தொண்டினையும் மனநிறைவுடன் செய்யத் தூண்டியது ஆசார்யனிட்டவழக்காய் இருத்தல் என்ற பாரதந்த்ர்யம்தான். அகந்தை சிறிதுமற்றவற்கே இப்படித் தொண்டாற்றல் இயலும். பல விதமான இழி தொழில்களைச் செய்து தனக்கு அகந்தை சிறிதும் இல்லாமலிருக்கிறதா என்று சோதித்துக் கொண்டதாக ராமக்ருஷ்ண பரம ஹம்ஸர் சரித்திரத்தில் படித்தது இங்கு நினைவுக்கு வருகிறது.

ஒரு சமயம் உடையவர் நீராடச்செல்லும் போது ஆண்டானை ஊன்றுகோலாக உதவி கொண்டு சென்று நீராடியபின் பிள்ளை உறங்காவில்லிதாஸரைப் பிடித்துக் கொண்டு திரும்பியது கண்ட ஆண்டான் மனதில் ஒருவித சலனமும் ஏற்படவில்லை. தம்மை ஆண்டவரான யதிபதி செய்வதில் ஒரு தவறும் இருக்கமுடியாது என்பது இவரின் திடமான நம்பிக்கை.

இவர் உடையவருடன் மேல் நாட்டில் எழுந்தருளி யிருந்த காலத்தில் இவர் சிஷ்யரான ஒரு ஸ்ரீவைஷ்ணவர் எம்பாரிடம் திருவிலச்சினை பெற்று அவருக்குத் தொண்டு செய்து கொண்டிருந்தார். அவர் ஆண்டானிடம் திருவிலச்சினை பெற்றவர் என்று எம்பாருக்குத் தெரியாது. ஆண்டான் திரும்பிய பின்னர் அந்த ஸ்ரீவைஷ்ணவர் அவரிடம் குற்றேவல் புரிவது கண்ட எம்பார் உண்மையறிந்து, தாம் தவறு செய்துவிட்டதாக எண்ணி ஆண்டானிடம் க்ஷமை வேண்டினார்.



முதலியாண்டான் எம்பாரிடம், "நீரில் விழுந்து இழவுபடுபவனை அதினின்றும் கரையேற்ற இருவர் கைகொடுத்தால் எடுக்குமவர்க்கும் எளிது; ஏறுமவனுக்கும் எளிது; அப்படியேயாகிறது இங்கும். தேவரீர் கலங்க வேண்டுவதில்லை" என்று பதில் தந்தாராம். இங்கு நீரில் விழுந்தது என்பது ஸம்ஸாரியாய்ப் பிறவிச் சுழலில் இன்னல்படுவதைக் குறிக்கும். இவனுடைய ஆத்மோஜ்ஜீவனத்திற்காக இரண்டு ஆசார்யர்கள் ஞானக்கை தந்து உய்வித்தால் ஸம்ஸாரி நிச்சயமாக எளிதில் உய்வடைவான் என்பது கருத்து. சிறிதும் அகந்தையற்றவரும் விசாலமனம் படைத்தவருமான ஒருவர் தான் இவ்விதமான கருத்தை வெளியிட இயலும் (திருவாய்மொழி 2-9-2).

ஒருசமயம் மிளகாழ்வான் என்னும் பெரியவர் ஆண்டானை வாதப்போருக்கழைத்தார். தோற்பவர் வெற்றி பெறுபவரைத் தோளில் சுமக்கவேண்டும் என்பது ஸங்கேதம். மிளகாழ்வான் சிறிது போதிலேயே தோற்றார். முதலியாண்டான் மிளகாழ்வானைச் சிறுமைப்படுத்தாது மன்னித்து எம்பெருமானார் திருவடிகளைத் தஞ்சமாகக் காட்டித்தந்து "எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்று இரும்" என்று உபதேசித்தருளினார்

எம்பெருமானார் திருவடி ஸம்பந்தத்தினால்தான் நாம் உய்வு பெறமுடியும் என்பது இவருடைய திடமான விச்வாஸம். தன்னை எதிர்த்தவருக்கும் இந்த மேலான உய்வுபாயத்தைக் கருணையுடன் உபதேசித்த இவருடைய பரந்த மனப்பான்மையை என்னென்பது? "ஒரு மலையினின்றும் ஒரு மலையிலே தாவும் ஸிம்ஹ சரீரத்தில், ஜந்துக்களைப் போலே பாஷ்யகாரர் ஸம்ஸாரலங்கனம் பண்ண, அவரோடுண்டான

RangaRakes
tamilnavarasam.com

குடல்துடக்காலே நாம் உத்தீர்ணராவதோமென்று முதலியாண்டான் அருளிச்செய்த பாசுரம்" என்று வேதாந்தவாசிரியர் திருவாக்கு, சிங்கத்தின் உடலில் ஒட்டியுள்ள ஈ, கொசு முதலான ஜந்துக்கள் கேவலம் அந்த ஸம்பந்தத்தால் தாமறியாமலே ஒரு மலையிலிருந்து இன்னொரு மலைக்குச் சென்று சேருமாப்போலே, எம்பெருமானாரிடம் நமக்குள்ள ஸம்பந்தத்தாலே நாம் உய்வுபெறுகிறோம். தனித்து நம்மால் இயலாத காரியம் இது என்பது இங்கு கருத்து.

## 7. அருளிச் செயலில் ஈடுபாடு

வார்த்தாமாலை என்னும் நூலில் முதலியாண்டான் அருளிச் செய்தாராகக் கூறப்படும் வார்த்தைகள் (நல்லுரைகள்) பலவுண்டு. அவற்றுள் ஸ்ரீவைஷ்ணவனுக்கு வாழ்நாள் உள்ளவரையும் போது போக்குவதற்கு வழி வகுக்கும்படி அமைந்த உரையில் (225) சில வரிகள்:- "உத்தேச்யரான ஸ்ரீவைஷ்ணவர்கள் விஷயத்திலும் மஹோபகாரகரான ஆசார்யன் விஷயத்திலும் கரணத்ரயத்தாலும் ஆனவளவும் அநுகூலராகாப் போருகையும், வருந்தியும் ப்ராதிகூல்யம் தவிர்க்கையும், ஆசார்ய ருசிபரிக்ருஹீதமான த்வயார்த்தம் நெஞ்சிலேபட அநுஸந்திக்கவும், உகந்தருளின நிலங்களிலே பலகாலும் புக்குமுகம் காட்டவும், அருளிச் செயலைக் கொண்டு போது போக்கவும்" என்பவை. மேலும் "ஆழ்வார்களின் அருளிச்செயல் அம்ருத பானம் போலே" என்றருளிச் செய்கிறார்.

விரும்பத்தகுந்தவரும் மதிப்பிற்குரியவருமான பாகவதர்கள் விஷயத்திலும், நமக்கு எம்பெருமானையும் எம்பெருமானுக்கு நம்மையும் காட்டித்தந்து பேருதவிபுரியும் ஆசார்யன் விஷயத்திலும் மனோ வாக்



காயம் மூன்றினாலும் நலனையே தேடுமவராய் இருத்தல் வேண்டும், மறந்தும் கேடு நினைக்கவோ செய்யவோ கூடாது. ஆசார்யன் உகந்தவிஷயமான த்வயத்தை அர்த்தத்தோடு ஸதா த்யானத்திற்கு விஷயமாக்கவேணும்; எம்பெருமான் உகந்து கோவில் கொண்டுள்ள அர்ச்சாஸ்தலங்களில் விடாமல் புக்கு அவனுக்குச் சிறப்புத் தரும் வகையில் ஸேவையில் ஊன்றியிருக்க வேண்டும். ஆழ்வார்களின் சொற்களான அருளிச்செயல்களை (திவ்யப்ரபந்தங்களை) அர்த்தத்துடன் ஸதா மனனம் செய்தும், பாடியும், போது போக்க வேண்டும். அவை அம்ருதம் போல இன்பம் பயப்பவை; நலன் பயப்பவை.

முதலியாண்டானுக்கு அர்ச்சையிலுள்ள ஈடுபாட்டை முன்னமே அநுபவித்தோம். அதுபோலவே அர்ச்சையை ப்ரதானமாக வைத்துப்பேசும் அருளிச்செயல்களிலும் இவருக்கு அளவு கடந்த ஈடுபாடு உண்டு இதற்குச் சான்றாக ஒரு நிகழ்ச்சி: எம்பெருமானார் பகல் போதில் வேதாந்த காலக்ஷேபம் (ஸ்ரீபாஷ்யம்) ஸாதிப்பர். இரவில் அருளிச் செயல் கொண்டு போதுபோக்குவது வழக்கம். ஒருநாள் அமுது செய்து திருப்பள்ளிக்கட்டிலில் ஏறி அமர்ந்து திருவாய்மொழி பாசுரம் ஒன்றைச் சொன்னதும் அருகிலிருந்த ஆண்டான் பரவசராய் மோஹித்தாராம். அதைக்கண்ட உடையவர், "வேதம் வால்மீகி ராமாயணமாக அவதரித்தது. அவ்வேதமே திருவாய்மொழியாக ஆழ்வார் வாயிலாக அவதரித்துள்ளது. இதை நினைத்து இவர் பரவசரானார் காணீர்!" என்றருளிச் செய்தாராம். (தன்குமாரர்களான லவகுசர்கள் வாக்கால் வேதத்தின் மறுபிறப்பான ஸ்ரீராமாயணத்தை திருச்செவியால் பருகினான் இராமபிரான். அப்பெருமானின் அம்சமான இவர் வேதத்தின் இன்னொரு மறுப்பிறப்பான

RangaRakes
tamilnavarasam.com

திருவாய்மொழி கேட்டு பரவசமானதில் வியப்பில்லை என்பது கருத்து).

திருவாய்மொழி வ்யாக்யானத்தில் முதலியாண்டான் நிர்வாஹம் என்று காட்டப்பட்டுள்ள இடங்கள் இன்பச்சுவையுடையதாய்க் காண்கின்றன. சிலவற்றை அநுபவிப்போம்.

"உற்றார்களைச் செய்வேனும் யானே என்னும்; உற்றார்களே அழிப்பேனும் யானே என்னும்" (5-6-7) என்று நம்மாழ்வார் நாயகியாய் அநுகரித்துப் பேசும் பேச்சு, தாய் "எம்பெருமான் இவள் பேரில் ஆவேசித்து இப்படிப் பேசச் செய்கிறானோ?" என்று வியக்கும் பாசுரம். உற்றார்-உறவினர்; இங்கு பகவானுக்கு நெருங்கி வந்த அடியார்கள். இவர்களைத் தன்னை ஆச்ரயிக்கும்படி பண்ணுமவன் பகவான். "போதரே என்று புந்தியுள்புகுந்து தன்பால் ஆதரம் பெருக வைத்த அழகன்" அன்றோ அவன்! இந்த அழகு ஆழ்வார் போன்ற அன்பர்களை அழிக்கவும்பண்ணும். காலாழும் நெஞ்சழியும் என்றெல்லாம் இவர்கள் பேசுகிறபடி காணலாம். இது முதலியாண்டான் காணும் ரஸமான பொருள். முன்னோர் சொன்ன பொருள்: அழிக்கை-விலக்குகை. யாதானும் பற்றி நீங்கும் விரதத்தை அவர்கள் நெஞ்சில் தோற்றிவைத்து விலக்குகை தன்னிடம் நெருங்கியவரை எம்பெருமான் விலக்குவான் என்பது ரஸமன்று என்று கண்ட ஆண்டான் கொண்ட பொருள் உயர்ந்தது. கூடாரை வெல்லும் சீர் (சீர்-குணம்-ஸாமார்த்யம்) கண்ணனது. கூடியவர்களை வெல்லவேண்டாவிறே. அவர்களுக்கு இவன் தோற்று, இவனுடைய நைச்சியம் கண்ட அவர்களை உருகப்பண்ணுகிறான். இதனால் அன்பருக்கு அவனை நின்று அநுபவிக்க இயலாமல் அழிவு





ஏற்படுகிறதன்றோ? மடலூர்தல் போன்ற அதிப்ரவ்ருத்திகளில் இறங்கி ஸ்வரூபத்தை அழித்துக் கொள்ளும்படி பண்ணவல்லதல்லவா அவனழகு? அவன் கட்டாயம் அருள் புரிவான் என்று ஆறியிருக்க வொட்டாமல் கதா? கதா? (எப்போது? எப்போது? அவன் வந்து ஆட்கொள்வான்?) என்று பார்ப்பது ஒரு நோக்கில் ஸ்வரூபநாசமாகும்.

திருக்குடந்தை விஷயமான திருவாய்மொழியில் (5-8-4)

**நலத்தால்மிக்கார் குடந்தைக்கிடந்தாய்! உன்னைக்காண்பான் நான்**
**அலப்பாய் ஆகாசத்தை நோக்கி அழுவன் தொழுவனே!**

எம்பெருமானை "உன்னை" என்று நேர்முகமாக விளிக்கும் ஆழ்வார் ஆகாசத்தை நோக்கி அழுவானேன்? துக்கத்தாலும், கலக்கத்தாலும் எதிரில் உள்ளவனும் கண்ணனுக்குத் தோற்றவில்லை என்றனர் முன்னவர். முதலியாண்டானோ, ஆகாசம் ஆதரவேதுமற்ற வெளியாகையாலே, தன்னுடைய போக்கற்ற நிலையை எண்ணி (நோக்கி-நினைந்து) வருத்தப்படுகிறார் ஆழ்வார் என்று பொருள் கூறினார். ஆழ்வார் தமது அநந்ய கதித்வத்தை அநுஸந்திக்கிறார் என்றபடி. முன்சொன்ன பொருளுக்கும் ஆண்டான் கண்ட பொருளுக்கும் உள்ள நெடுவாசி காண்க.

எம்பெருமான் வந்து முகம் காட்டாததால் அவன் வரவேமாட்டான் என்று நசையற்று அல்லல்படுகிறார் ஆழ்வார் (3-2-10) "தலைப்பெய்காலம் நமன்தமர் பாசம் விட்டால் அலைப்பூணுண்ணும் அவ்வல்லல்" என்ற பாசுரத்தில். தலைப்பெய்தல் என்று கிட்டுதலாய், நமனைக்கிட்டும் காலத்தில் யமனுடைய ஆட்கள் வந்து பாசக்கயிற்றை வீச, ஆசை இவ்வுலகத்திலிழுக்க,

நமன்தமர்கள் அங்கிழுக்க, நடுவே கிடந்து படும் அல்லல் என்று பொருள் கொண்டார் எம்பார். எம்பெருமான் வராததால் வரும் துன்பம் இத்தகையது என்று கருத்து. ஆனால் பாகவதரை நெருங்க நமன்தமருக்கு அதிகாரமில்லாததால் அவர்கள் ஆழ்வாரை நெருங்க வாய்ப்பே இல்லை. அவ்வல்லலை ஆழ்வார் அநுபவிக்க வாய்ப்பே இல்லை. இங்கு முதலியாண்டான் கூறும் பொருள்:- "எம்பெருமான் இனி வரமாட்டான்; அவனைக்கிட்டவே போவதில்லை என்று அவனைக் கூடுவதில் நசையற்றார் ஆழ்வார். எம்பெருமான் தன்னைக் கைவிட்டுவிடவே தமது பாகவதத்வம் (எம்பெருமானுக்கு அணுக்கரான நிலை) குலைந்தது; குலையவே நமன்தமரும் வந்து தமது ஸாமர்த்யத்தை இவரிடம் காட்டப்புகுந்தனர். அந்த நிலையில் எம்பெருமான் வந்து முகம் காட்டி அவ்வல்லலைப் போக்கி அருள்புரிந்தான் என்பது ஆழ்வாரின் மானஸாநுபவம்" என்பதே.

"கண்கள் சிவந்து என்னும் திருவாய்மொழி (8-8) எம்பெருமான் தனக்குச் சரீரமான இவரின் ஆத்மவஸ்துவின் பெருமையை உணர்த்துவதாக அமைந்தது; என்று வியாக்யானம் செய்யப்பட்டுள்ளது முதலியாண்டானுடைய நிர்வாஹத்தையொட்டியே. "நின்ற ஒன்றை உணர்ந்தேனுக்கு" (8-8-5) முதலாக நான்கு பாசுரங்கள் ஆத்மஸ்வரூபத்தைப் பற்றி பேசுமவை. "எய்த்தார்" (8-8-6) என்று தொடங்கும் பாசுரத்தில் "எம்பெம்மானோடு ஒத்தே சென்று அங்குள்ளம் கூடக் கூடிற்றாகில்" என்று ஆழ்வார் பாசுரம்.

RangaRakes



(8-8-5) ஈடு "கீழ் பகவத்ப்ரகாரமாக ஆத்மா அநுஸந்திக்கப்பட்டது; இதுக்கு மேல் நாலுபாட்டு, படகதமான ஸௌக்ல்யத்தைப் பிரித்து நிஷ்கர்ஷ சப்தத்தையிட்டு வ்யவஹரிக்குமாபோலே" (வஸ்த்திரத்திலுள்ள வெண்மையைப் பிரித்து, வஸ்த்ரத்தின் வெண்மை என்று தனித்துச் சொல்வது போல) எம்பெருமானோடு (8-8-8)ல் "எம்பெருமானோடு ஒத்த சென்று" என்பதற்கு "எம்பெருமானுக்கு ஒத்த சுத்தியையும் ஞானம், ஆநந்தம் முதலியவைகளையும் லக்ஷணமாகக் கொண்ட ஆத்மாவில் மனது சென்று தேர்தல் நலம்"- என்பது எம்பார் திருவுள்ளம். எம்பெருமானிடமிருந்து ஆத்மாவைப் பிரித்துப் பேசுகை இது. (வஸ்து ஸ்வரூபத்தில் எம்பெருமானுக்கு ஆத்மா சரீரமாகையாலே பிரியாத ப்ரகாரமாய்த்தான் உள்ளது 'வஸ்த்ரத்தின் வெண்மை: என்பது போல சேர்ந்துள்ள வஸ்துவை பேச்சளவுக்குப் பிரித்துப்பேசுகை இது).

ஆண்டான் நிர்வாஹத்தில் 'எம்பெம்மானோடு ஒத்து' என்பதற்கு எம்பெருமான் திருவுள்ளத்தை அடியொற்றி -அதாவது எம்பெருமான் இவனைத் தனக்குச் சேஷப் பொருளாக (ஸொத்தாக - அடிமையாக) எண்ணி உள்ளது போல, இவனும் எம்பெருமானுக்குத்தான் சேஷம் என்று உணர்ந்து, நினைந்து, என்று பொருள். ப்ரகாரி என்பது எம்பெருமானை அவனிடமிருந்து பிரியாமல் உள்ள தத்வம் ப்ரகாரம் எனப்படும்.

"ஒருவன் அடியேனுள்ளானே" (8-8-1) என்று தொடங்கிய ஆழ்வாருக்கு எம்பெருமானை விட்டு ஆத்மவஸ்துவைப் பிரித்துப் பார்ப்பதோ பேசுவதோ செய்யாமல் அவனுடன் எப்போதும் சேர்ந்துள்ளதாகப் பேசுவதே திருவுள்ளத்துக்கு இசைந்த பொருளாயிருக்கும்.

tamilnavarasam.com

## 8. மேலும் குணநலன்கள்

ஸ்ரீபராசரபட்டர் தமது தகப்பனாரிடம் திருவாய்மொழி பயிலும் போது சிறுமாமனிசர் என்ற சொற்றொடர் நேர்பட, சிறுமையும் பெருமையும் ஒரே மனிதரிடம் எப்படி வாய்க்கும்? என்று தந்தையான ஆழ்வானைக்கேட்க, முதலியாண்டானையும் அவரை யொத்த பெரியோர்களையும் காட்டி, இவர்கள் போல வடிவில் சிறுத்தவரும் குணங்களால் வரும் ப்ரபாவத்தில் கனத்திருப்பவரையும் நம்மாழ்வார் சிறுமாமனிசர் என்கிறார் என்பதாக விளக்கினாராம். பகவத் விஷயத்திலும் ஆசார்யவிஷயத்திலும் ஆழ்ந்திருப்பவர்கள் மனிதர்களாயினும் நித்யஸூரிகளோடு ஒப்பர் என்பது கருத்து.

முன்காலத்தில் தளிகைக்குப் பெரும்பாலும் மண்பாண்டங்களையே பயன்படுத்தி வந்தனர். அவைகளின் தூய்மை குறைந்தால் அவற்றை அறவே விலக்கிவிட்டு வேறுபுது பாண்டங்களைக் கொள்வது ஆசாரமாயிருந்தது. ஒரு சமயம் உடையவரையன்றி வேறு தெய்வமறியாத வடுகநம்பி என்னும் பெரியவருடைய இல்லத்திற்குச் சில சுற்றத்தினர் வந்து தங்கநேர்ந்தது அவர்கள் ஸதாசார்ய ஸம்பந்தமில்லாதவர்களாதலால் ஸ்ரீவைஷ்ணவத்வம் இல்லாதவர்கள் என்று நம்பி கருத்து. ஆயினும் உறவினர்களாதலால் அவர்கள் தமது இல்லத்தில் தங்குவதற்குச் சம்மதித்திருக்க வேண்டியிருந்தது. அவர்கள் சென்றபின்னர், தமது அகத்தைத் தூய்மைப்படுத்தி, தளிகைப் பாண்டங்களை அப்புறப்படுத்திவிட்டு, முதலியாண்டான் ஆண்டுகழித்த மண்பாண்டங்களை வேண்டிக்கொணர்ந்து அவைகளைப் பயன்படுத்தலால் நம்பி மனநிம்மதி பெற்றதாகச் சரித்திரம் காண்கிறோம்.



இராமாநுஜரின் சிறியதாயார் குமாரர் கோவிந்த பெருமாள். இவர் பால்யத்தில் ராமாநுஜருடன் வேதாந்தம் கற்றவர். பிறகு இவர் கர்மவசத்தால் சைவராகி காளஹஸ்தியில் இருந்தபோது, பெரிய திருமலை நம்பியால் ராமாநுஜரின் வேண்டுகோளுக்கிணங்க வைஷ்ணவராகத் திருத்தப்பட்டு ராமாநுஜருக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டவர். வைராக்யபூர்ணராய் இருந்த இவருக்கு எம்பெருமானார் ஸந்யாஸ ஆச்ரமம் தந்து எம்பார் என்று பெயரிட்டு அறிய வேண்டுவன வெல்லாம் உபதேசித்தருளினார். இப்படி அருள் பெற்ற எம்பாரை நோக்கி, "தமது ஆசார்யர்களிடம் படாத பாடுபட்டு பெற்ற பெருமைவாய்ந்த பொருள்களை அவர்பட்டது எதுவும் படாமல் உடையவரருளால் பெற்றீர். மேலும் உம்மைப் பெறுவதற்கென்று நமதாசாரியாரான உடையவர் படாதபாடும் பட்டார். என்னே உமது பெருமை!" என்று முதலியாண்டானும் கூரத்தாழ்வானும் உகந்து கூறினராம். பிறர் உற்ற பெருமை கண்டு மகிழ்வது காண்டற்கரிய மஹாகுணமாகும்.

ஆசார்ய பரதந்த்ரராய் வாழ்ந்து வந்த முதலியாண்டானுக்கு ஒரு குமாரர் ஆசார்யகைங்கர்யத்துக்கு பாங்காக அவதரித்தார். ஸ்வாபிமானமே சிறிதுமில்லாத ஆண்டான் அம்மகவை எம்பெருமானார் திருவடிகளில் இட்டுப் பெயர்சூட்டும்படி வேண்ட, உடையவரும், ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ நிறம்பியுள்ள அக்குழந்தையை இருகரங்களால் எடுத்தணைத்துத் தமது குளிர்ந்த கடாக்ஷத்தால் வாழ்வித்து இளையாழ்வான் ராமாநுஜன் என்று திருநாமமிட்டார். இந்த திருக்குமாரர் கந்தாடையாண்டான் என்று ஸ்ரீவைஷ்ணவர் போற்றும் ஆசார்யராய் பின்னர் விளங்கினார். இவரே எம்பெருமானாரின் அவதாரஸ்தலமான ஸ்ரீபெரும்புதூரில்

RangaRakes tamilnavarasam.com

ஸ்வாமியின் அநுமதி கொண்டு அவர் வடிவை அப்படியே ப்ரதிபலிப்பதான அர்ச்சாரூபியான திவ்யமங்களவிக்ரஹத்தை அவருடைய விபவகாலத்திலேயே ப்ரதிஷ்டைகண்டருளப் பண்ணினார். ஸ்ரீரங்கத்தில் ஸ்வாமியை திருப்பள்ளிப்படுத்திய வஸந்த மண்டபத்தில் (கோவிலுக்குள்) உடையவருக்கு ஸந்நிதி நிர்மாணம் பண்ணி விக்ரஹப்ரதிஷ்டையும் செய்வித்தார். அவதாரஸ்தலத்தில் தானுகந்ததிருமேனியும் கந்தாடையாண்டானின் பெரும் முயற்சியால் பின்னானார்களுக்குப் பெருநிதியாய்க் கிடைத்துள்ளன.

ஆசார்யனே உய்வுபாயம். ஆசார்யனிடம் சிஷ்யனுடைய உறவு அவனுடைய மனைவியுடையது போலும் அவனுடல் போலேயும் அமையவேண்டும் என்பர் முதலியாண்டான். மனைவி சொன்னதைச் செய்வாள். உடல் விரும்பியதை (மனதில் நினைத்ததைச்) செய்யும். இப்படி எல்லாவிதத்திலும் ஆசார்யனுக்கு பரதந்த்ரனாயிருப்பதே சிஷ்யன் இருக்கவேண்டிய நிலை. ஆசாரியன் நினைப்பது செய்வது எல்லாம் ஸாமாந்ய, விசேஷ தர்ம அநுஷ்டான ரூபமாகவே இருக்குமாதலால் சிஷ்யன் வழிதவறிக்கெட வழியில்லை.

ஒரு சமயம் ஆழ்வானும் ஆண்டானும் அளவளாவுகையில் "குற்றமின்றிக் குணம் பெருக்கிக் குருக்களுக்கநுகூலராய்" என்று பெரியாழ்வார் அருளிச் செய்துள்ளமையால் "நமது ஸேவையாக ஆசார்யனை உகப்பித்து அவ்வுகப்படியாய் அருள் பெற்று நல்வாழ்வு பெற வேண்டும்" என்று ஆண்டான் கூறினார். ஆழ்வானோ, மதுரகவிகள், "பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வான்" என்றருளியுள்ளதைக் காட்டி, "தாமே



நம் செல்லாமையைக் கண்டு இரங்கி அருள்புரியும் குருவே நமது உய்வுக்கடி" என்று காட்டினார். "தேவுமற்றறியேன்" என்று ஆசார்யனையே தெய்வமாகக் கொண்டு இதில் ஊன்றி நின்ற மதுரகவியாழ்வாரின் சொல்லே நல்வழி காட்டுமது என்று ஆழ்வான் சொன்னதைப் போற்றித் தம் நெஞ்சில் கொண்டார் முதலியாண்டான்.

இங்கு நாமறிந்து நடைமுறை இலக்கணமாக்கொள்ள வேண்டிய கருத்து இதுவே. எப்போதும் எந்நிலையிலும் ஆசார்யனுக்கு அநுகூலமாய் அவனுக்குப் பரதந்த்ரனாய் நடந்து அவனுக்கு உகப்பைத் தரும் காரியங்களையே செய்யவேண்டும்- இது பெரியாழ்வார் நல்கும் உபதேசம். ஆனால் நாம் ஏதோ செய்துவிட்டால் அதடியாக ஆசாரியன் நமக்கு அருள் புரிந்தான் என்று எண்ணுவது மிகத்தவறு. காரேய் கருணை இராமாநுசனுடைய சிஷ்யர்கள் இவர்கள். முலைக்கடுப்பாலே தானே பால்பெருகும் தாய்ப்பசு போல சிஷ்யனுக்கு உபதேசித்தல்லது தரியாத அளவுக்குக் கருணையுள்ளம் படைத்த எம்பெருமானார், இவருக்குத் தெய்வமான நம்மாழ்வார் போன்ற "க்ருபாமாத்ர ப்ரஸன்னர்களான" ஆசாரியர்களே உய்வுபாயமாக இருக்கமுடியும். இதுவே மதுரகவி காட்டிய உயர்ந்த கருத்து.

"ஆசான் போலே மாணவன்" என்பதற்கேற்ப முதலியாண்டானிடம் அவர் சிஷ்யர்கள் காட்டிய அன்பும் நன்றியுணர்ச்சியும் ஒரு நிகழ்ச்சியாலே. தெரியவருகிறது. நம்பி திருவழுதி வளநாடு தாஸர் என்றொரு சிஷ்யர் ஆண்டான் ஸ்ரீபாதத்திலவர். ஒரு சமயம் ஏதோ காரணத்தால் அவர்பேரில் கோபம் கொண்டு, அவரை மிகவும் முனிந்து உதைத்து

RangaRakes tamilnavarasam.com

தள்ளிவிட்டார் ஆண்டான். ஆயினும் தாஸர் எங்கும் செல்லாமல் அன்று முழுவதும் ஆண்டானுடைய வாயில் திண்ணையிலேயே கிடந்து விட்டார். மறுநாள் ஆண்டான் அமுது செய்யப்புகும் போது கோபமெல்லாம் தணிந்து அன்புடன் தாஸரைப்பற்றி விசாரித்தபோது அவர் வாசலிலே உணவும் கொள்ளாமல் இருப்பதாக அறிந்து, அவரை "ஏன் இங்கேயே கிடந்தாய்?" என்று வினவ, தாஸரும், "ஒரு நாள் ஒரு பிடி சோறிட்டவன் அடித்தாலும் அவன் வாசல் விட்டுப் போறதில்லை நாய். எனக்குப் போக்கிடம் வேறு இல்லை" என்று பதிலளித்தாராம், "நான் விலகினேனாகில் மஹோபககரகனான ஆசாரியன் விஷயத்தில் நன்றி இல்லாதவனாய் நாயினும் தாழ்ந்தவனாக மாட்டேனா?" என்பது தாஸர் கருத்து. அவரை ஆண்டான் உகந்து பணிகொண்டார் என்று சொல்லத் தேவையில்லை.

## 9. சில வரலாற்றுக் குறிப்புகள்

ஸ்ரீரங்கம் கோயில் வரலாற்றைக் கூறும் நூல் கோயிலொழுகு என்று ப்ரஸித்தமானது. ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீரங்கநாதனுடைய கோயில் நிர்வாகத்தைத் திறம்பட நடத்தியருளிய விபரங்களை இந்நூலில் காணலாம். இதில் காணப்படும் விஷயங்கள் பெரும்பாலும் ஒரு குருபரம்பரை நூலில் காணப்படுமவற்றை ஒத்தே உள்ளன. சில இடங்களில் வேறுபாடும் காணப்படுகிறது. குரு பரம்பரை நூல்களில் காணக்கிடைக்காத வரலாற்றுக் குறிப்புகள் சிலவற்றையும் இங்கு காண்கிறோம். முதலியாண்டானைப் பற்றி கோயிலொழுகில் காணப்படும் பல விஷயங்கள் இக்கட்டுரைத் தொடரில் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் சிலவற்றை இப்போது அநுபவிக்கலாம்.

RangaRakes



சோழ அரசனால் ஏற்பட்ட அபாயத்தைத் தவிர்க்க உடையவர் வெள்ளை சாத்திக்கொண்டு முதலியாண்டானைத் துணையாகக் கொண்டு மேல்நாட்டுக்கு எழுந்தருளியதும், அங்கு 15ஆண்டுகளுக்கு மேல் பல சாதனைகள் கண்டதும் முன்னமே பேசப்பட்டுள்ளன. அச்சோழ அரசன் க்ருமிகண்டனாய் மாண்ட பின் உடையவரும் ஆண்டானும் திருவரங்கம் திரும்பிய போது, க்ருமி கண்டனின் மகனான சோழவரசன் தன் தந்தையின் செயலுக்கு வருந்தி உடையவரை அழைத்து அவரிடம் கோவிலாட்சி பூராவையும் ஒப்புவித்து அவர் திருவடிகளில் ஆச்ரயிக்கவும் விரும்பினான். உடையவரும் மிக உகந்து அவ்வரசனை முதலியாண்டானிடம் ஆச்ரயிக்கப் பண்ணி திருவரங்கம் திருப்பதியை (கோவிலாட்சியை) அவருக்கு தாரா பூர்வகமாக தாநசாஸனம் பண்ணுவித்து, இந்த விருத்தாந்தத்தை ஆரியபடாள் வாசலில் சிலாலிகிதம் (கல்வெட்டாக) பண்ணி வைத்தார்.

உடையவரும் யதாபூர்வமாக (முன்பு போல) ஆண்டானைக் கொண்டு ஸ்ரீகாரியத்தை நடத்துவித்துக் கொண்டு வருமளவில், ஒரு மஹோத்ஸவத்தில் தானப்ரகரணத்தில் உபகாரஸ்ம்ருதியாலே பெரியநம்பி குமாரருக்கு மாடமாளிகைசூழ் திருவீதியில் தென்கண்டத்தில் மேலப்புரத்தில் ப்ரதம நிவேசநமான (முதல் வீடு) ஆளவந்தார் மடத்தையும், ஆழ்வானுக்கு அதுக்கு எதிர் மனையையும் ஆண்டானுக்கு அதுக்குத் தென் மனையையும் தானம் பண்ணுவித்து, தான சாஸனமாக சேனாபதிப் பட்டயமும் ஸாதித்தருளினார். இப்படி உடையவர் அருளிய மனையின் ஒரு பாகத்தில் நமது முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

tamilnavarasam.com

முதலியாண்டானுடைய ஒரே குமாரர் கந்தாடையாண்டான். இவரைப்பற்றிச் சில குறிப்புகள் முன்னமேயே வந்துள்ளன, ராமானுஜரால் அணைக்கப்பட்டு குளிர நோக்கப்பட்டவரிவர்.

ராமாநுஜார்ய பூயிஷ்டாம் நம உக்திம் ப்ரசக்ஷ்மஹே!
யதீந்த்ர கரஸம்ஸ்பர்சஸௌக்யம் யேநாநுபூயத!!

என்று யதிராஜர் எடுத்தணைத்த இன்பம் கண்ட கந்தாடையாண்டானை உலகம் போற்றி வணங்குகிறது. முதலியாண்டானுக்கு பிறகு இவரே ஸேநாபதிதுரந்தரராக கோவில் ஸ்ரீகாரியத்தை நடத்திவந்ததாக அறிகிறோம். கந்தாடையாண்டானுடைய குமாரர் கந்தாடைத் தோழப்பர் (மித்ரதாதர்).

கந்தாடைத்தோழப்பர் ஸ்ரீகாரியம் நிர்வகித்து வருகையில் இவர் குமாரர்களான பெரியவரதாசாரியரும் சின்னவரதாசாரியரும் ஞானபக்தி வைராக்யபூர்ணர்களாய் அழகிய மணவாளப் பெருமாளுக்கு ஸகலவித கைங்கர்யங்களையும் பண்ணிக் கொண்டு வாழ்ந்திருக்கையில் ஒருநாள் சின்னவரதாசாரியர் பெருமாளுக்கு பாங்காகப் பாலமுது காய்ச்சி அமுதுசெய்வித்து பெரிய வரதாசாரியருடம் கொடுக்க, அவர் அதைப் பார்க்கையில் ஒரு த்ருணம்(புல்) இருக்ககண்டு, "இது பெருமாள் நெஞ்சில் குத்துமே" என்று தொண்டை விக்கி மோஹித்தார். அதுகேட்ட சின்னவரும் மூர்ச்சித்தார். பிறகு க்ரமமாய் மூர்ச்சை தெளிந்தவாறே பெரிய பெருமாள் உகந்து இவர்களுக்கு முறையே பெரியாயி, சிறியாயி என்று திருநாமமிட்டு மகிழ்ந்தார்.

கந்தாடைத் தோழப்பரை மணவாளமாமுனிகள் "துன்னுபுகழ் கந்தாடைத் தோழப்பர் தம்முகப்பால் என்ன உலகாரியனோ? என்றுரைக்க..." என்ற பாசுரத்தில் புகழ்



மிக்கவராகப் பேசி அருளுகிறார். தோழப்பர், நம்பிள்ளையின் ஆத்மகுணங்களுக்குத் தோற்று, "நீர் உலகத்துக்கெல்லாம் ஆசாரியராய் இருக்கத்தக்க "உலகாரியன்" என்று உகந்து சொல்ல, நம்பிள்ளைக்கு உலகாரியன் (லோகாரியன்) என்னும் பெயராயிற்று. இந்தப் பெயரை வடக்குத் திருவீதிப்பிள்ளை (நம்பிள்ளையின் சீடர்) தமது குமாரருக்கு இட்டார். ஸம்ப்ரதாயத்தில் பரமகாருணிகர் என்று புகழப்படும் பிள்ளைலோகாசாரியர் இக்குமாரரே. மணவாள மாமுனிகளுக்கு எம்பெருமானாரின் ப்ரியபாகிநேயரான முதலியாண்டானின் வழித்தோன்றல்களான ஆசாரியர்களிடம் இருந்த பெருமதிப்பிற்கு துன்னுபுகழ் கந்தாடைத் தோழப்பர் என்ற வாசகம் ஒரு சான்று.

ஒரு சமயம் பெரியாயி ஒரு யாகம் பண்ணினார். நம்பெருமாள் யாகசாலைக்கு எழுந்தருளி ஆயியைக் கடாக்ஷிக்க, ஆயியும் தமது அனைத்தையும் பெருமாளுக்கு ஸர்வஸ்வ தானமாக ஸமர்ப்பித்தார். அப்போது பெருமாளுக்குப் பல கைங்கர்யங்களைப் பண்ணி சைவர்களால் வந்த ஆபத்துக்களை மந்த்ர சக்தியால் நிவர்த்தித்து வந்த கூரநாராயண ஜீயருக்கு முதலியாண்டானதீனமாக வந்த உடையவரிலச் சினையான திருவாழிமோதிரத்தை ஆயிஸம்மதியுடனே பரிசிலகாத் தந்தருளி, "சேநாபதிதுரந்தரான் ஸ்ரீரங்க நாராயண ஜீயர்" என்ற பட்டப்பெயரும் அருளினார்.

வாதூல தேசிகர் என்ற பட்டப் பெயருடன் பெரியாயி கைங்கரியம் நிர்வகித்து வருகையில் ராஜகோபத்தினால் பெரியாயி அதீனம் விட்டு திருமழிசைக்கு எழுந்தருள, கந்தாடைத்தோழப்பரும் சிறியாயி, ஈயான் ராமாநுஜாசாரியர் என்ற தமது இதர குமாரர்களுடன் பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளி

RangaRakes tamilnavarasam.com

தேவப்பெருமாளுக்கு நித்யகைங்கர்யமாக சாலைக் கிணற்றிலிருந்து திருமஞ்சனம் எழுந்தருளப் பண்ணிவந்து ஸமர்ப்பித்துக் கொண்டு தர்சநம் நிர்வஹித்துக் கொண்டு வாழ்ந்திருந்தார். தற்சமயம் ஸந்நிதி வீதியில் நமது ஸ்வாமிகள் அநுபவிக்கும் திருமாளிகை தோழப்பர் ஸ்தாபித்தது. தேவப்பெருமாளின் ஷட்பேர திருவாராதனத்தில் ஒரு மூர்த்தியான அழைத்து வாழ்வித்தவர் (ஆஹூயரக்ஷகஹரி) என்னும் எம்பெருமான் இவருக்குத் திருவாராதனமாகத் திருமாளிகைக்கு எழுந்தருளினான். இப்படி வாழ்ந்தருளும் காலத்தில் தேவப்பெருமாள் தோழப்பர் ஸ்வப்நத்தில் எழுந்தருளி "உமது மூன்றாம் குமாரராலே (ஈயான் ராமாநுஜர்) ஸ்தலம் (திருவரங்கம்) சேரப்போகிறீர்" என்று நியமித்தார்.

தேவப்பெருமாளுக்கு ப்ரியஸுஹ்ருத்தாய் (தோழமை கொண்டவராய்) இருந்ததால் இவருடைய இயற்பெயர் மறைந்து தோழப்பர் என்றே நிலைத்த பெயராயிற்று என்று பெரியோர் பணிப்பர். சிறிது காலத்திலேயே பெரியாயிடம் அபசாரப்பட்ட சோழன் மாண்டு, 'முத்துக் க்ருஷ்ணராஜா' என்பவர் ராஜ்யம் பண்ணுகையில் அவனைப் பெருமாள், தோழப்பர் குமாரரான ஈயானை அழைத்து, முன்பு முதலியாண்டான் அதீனமாயிருந்ததை அவரதீனமாக்கும்படி நியமிக்க அரசனும் அப்படியே செய்தான். அப்படியே ஈயான் ராமாநுஜாசாரியரும் வாதூலதேசிகராய், கோவில் ஜீர்ணோத்தாரணம் முதலிய கைங்கர்யங்களைப் பண்ணி, பெருமாளுக்கு உத்ஸவங் களையும் உபசாரங்களையும் சிரிய முறையில் நடத்தி வந்தார்.



ஈயான் ராமாநுஜரையடுத்து அவர் குமாரர் திருக்கோபுரத்து நாயனாரும், பின்னர் அவர் குமாரர் சிற்றண்ணரும் வாதுலதேசிகபதம்வகித்து ஸ்ரீரங்கஸ்ரீயை வெகுவாக வளர்த்தனர். இந்த சிற்றண்ணருடைய பௌத்ரரான சிற்றண்ணரின் குமாரரே அப்பாச்சி யாரண்ணா. சிற்றண்ணருடைய ஜ்யேஷ்டகுமாரரான கோவில் ஸ்ரீரங்கராஜநாயன் வாதூலதேசிகராக நிர்வாஹம் நடத்தும்போது துலக்கர்களால் ஸ்ரீரங்கத்திற்குப் பேராபத்து ஸம்பவித்தது. இவர் பெருமாளை ரஹஸ்யமாக வெளியிப்படுத்தி கோவிலைப் பலபடியாகவும் ரக்ஷித்துத் தாமும் மற்றும் பல ஆயிரம் ஸ்ரீவைஷ்ணவர்களுடன் துலுக்கர்களால் கொலையுண்டார். சிற்றண்ணருடைய திருத்தம்பியான தெய்வங்கள் பெருமாள் தோழப்பர் குமாரரான தேவராஜதோழப்பர் குமாரர்களுள் கந்தாடை அண்ணனும் அப்பனும் புகழ் பெற்றவர்கள். கந்தாடை அண்ணன் மணவாள மாமுனிகளின் அஷ்டதிக்கஜாசார்யர்களில் முக்கியமானவராவார்.

எம்பெருமானாரின் பேரன்புக்கு விஷயமான முதலியாண்டானின் ஸம்பந்தம் தமக்கும் விரும்பிப் பெறத்தக்கது என்று ஆவலுற்ற மணவாளமாமுனிகளுக்கு அந்த ஸம்பந்தத்தை யதிராஜரே ஸாதித்துத் தந்தார். முதலியாண்டானின் வழித்தோன்றிய காந்தாடையண்ணன் முதலானவர்களின் கனவில் தோன்றி, "நாமே மாமுனிகள்! அங்கு ஆச்ரயித்து உஜ்ஜீவியுங்கோள்" என்று நியமித்தார்.

## 10. அப்பாச்சியாரண்ணா

கோவில் ஸ்ரீரங்கராஜநாயன் வாதூலதேசிகர் நெடுங்கிய காலம் அநபத்யராயிருந்து (ஸந்ததி இல்லாதவராய்) பெருமாளருளால் ந்ருஸிம்ஹதேசிகர் என்ற குமாரரைப் பெற்றார். அப்போது [illegible] ஸ்ரீரங்கத்திற்கு

RangaRakes
tamilnavarasam.com

ஆபத்துவந்து பெருமாளும் கோவிலை விட்டு எழுந்தருளும்படியாயிற்று. எண்ணற்ற ஸ்ரீவைஷ்ணவர்கள் கொலை செய்யப்பட்டனர். குழந்தையாயிருந்த ந்ருஸிம்மதேசிகர் ஆந்த்ரதேசத்திற்குப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டதாக அறிகிறோம். இதுபோல ச்ருதப்ரகாசிகாபட்டரின் குமாரர்களான இரு குழந்தைகளும் காப்பாற்றப்பட்டனர். வெகுகாலம் பெருமாள் திருப்பதி, திருநாராயணபுரம் முதலான இடங்களில் மறைந்திருந்து நெடுகிய காலம் கழிந்தபின் கோயிலுக்கு எழுந்தருளிய போது ராஜாவை அநுகூலம் பண்ணிக்கொண்டு வேதாசார்யபட்டர் என்பவர் கோவிலில் கந்தாடை யாரதீனங்களைத் தம்வசமாக்கிக் கொண்டதாகக் கோயிலொழுகு கூறுகிறது.

ஈயான் ராமாநுஜருடைய குமாரரான திருக்கோபுரத்து நாயானாருடைய குமாரர் சிற்றண்ணர். இவருடைய குமாரர்களுள் ஸ்ரீரங்கராஜநாயன் மூத்தவர். இளையவரான தேவப்பெருமாள் ஸந்நிதி எம்பா என்பவரின் குமாரர் பெயரும் சிற்றண்ணர் என்பதே. தீர்த்த தேவராஜார்யர் என்று புகழ்பெற்ற திருமஞ்சனம் அப்பா என்பவரின் ஸத்புத்ரியான ஆய்ச்சி என்பவரை சிற்றண்ணர் மணந்திருந்தார்.

துலுக்கரால் ஏற்பட்ட கலகமெல்லாம் சாந்தி அடைந்து பெருமாளும் திருவரங்கம் சேர்ந்து ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயும் அங்கு மறுபடி தழைத்த நல்லடிக்காலம் அது. பிள்ளைலோகாசாரியருக்குப் பிறகு தர்சநப்ரவர்த்தகாசார்யராய் விளங்கிய திருவாய்மொழிப் பிள்ளை மணவாளமாமுனிகளை திருவரங்கம் சென்று சேர்ந்து அங்கிருந்து தர்சநத்தலைவராய் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயை வளர்க்கும்படி நியமித்தன்படியே, அவரும் ஆழ்வார் திருநகரியிலிருந்து ஸ்ரீரங்கத்திற்கு வந்து குடிபுகுந்தார். உத்தமாச்ரம ஸ்வீகாரம்பண்ணி (ஸ்நயாஸம் பெற்று) அழகிய மணவாளமாமுனி என்ற பெயருடன், கந்தாடையாண்டானின் ஆசார்யரரான ஆட்கொண்ட வில்லிஜீயர் முன்பு வாழ்ந்திருந்த பல்லவராயன் மடத்தையும், அந்த ஜீயர் திருவாராதனமான தீமனம் கெடுத்தார் என்ற எம்பெருமானையும், பரிசாகப் பெற்று அங்கு வாழ்ந்திருந்தார். மணவாள மாமுனிகளை பெரிய ஜீயர் என்று அடியார்கள் அழைப்பர்.



திருமஞ்சனம் அப்பா ஜீயர் திருவடிகளில் மிகவும் அன்பு பூண்டவர். திருக்காவேரியில் தினமும் ஜீயர் நீராடி வரும் ப்ரவாஹத்திலே நீராடித் தூய்மை பெற்று அவரிடம் மிகவும் ப்ரேமையுடையவராய் ஆச்ரயித்து அங்குத்தைக்குக் கைங்கர்யங்கள் பண்ணிக்கொண்டு வாழ்ந்திருந்தார். ஒரு நாள் ஜீயர் நீராட எழுந்தருளும் போது எதிர்பாராதபடி கனத்தமழை பொழியவே, வழியில் நேர்ப்பட்ட ஒரு ஸ்ரீவைஷ்ணவதிருமாளிகையில் திண்ணையில் எழுந்தருள நேர்ந்தது. அந்த க்ருஹ யஜமானி ஜீயரை வரவேற்று வீற்றிருக்கச் செய்து, அவருடைய ஈரமான திருவடிநிலைகளைத் தம்தலையில் வைத்துக்கொண்டு சேலைத்தலைப்பால் துடைத்துப் பரிமாறினார். ஜீயரும் அந்த அம்மையை "நீர் யார்?" என்று வினவ அவர் திருமஞ்சனம் அப்பாவின் குமாரத்தி, கந்தாடை சிற்றண்ணர் மனைவி என்று அறிந்து, "நமது அப்பாச்சியாரோ!" என்று உகந்து கூறி, அவரைக் குளிர கடாக்ஷித்து, மழைவிட்டதும் நீராட்டத்துக்கு எழுந்தருளினார்.

ஆச்சியாரும் ஜீயர் திருவடிநிலைகளினின்றும் திருமஞ்சனம் (தீர்த்தம்) ஊறியதாலும் (ஸ்ரீபாததீர்த்த

RangaRakes
tamilnavarasam.com

ப்ரபாவத்தினாலும்) அவருடைய அருள் நோக்கினாலும் ஞானதோயம் பெற்று ஜீயர் திருவடிகளில் ஆச்ரயிக்க விரும்பினார். தெரிந்தால் பர்த்தாவும் (கணவர்) அவரைச் சேர்ந்தவர்களும் (கந்தாடை ஆசார்யபுருஷர்கள்) ஸம்மதிக்கமாட்டார்கள். மிகவும் ஆக்ஷேபிப்பர்கள் என்று அறிந்தும் ஜீயர் திருவடிகளில் ஆச்ரயித்தாலல்லது தரிக்கமாட்டாமல், தகப்பனாரான அப்பாவின் புருஷகாரம் கொண்டு ஜீயரிடம் ஸமாச்ரயணம் பெற்று, சிலநாட்கள் பிறந்தகத்திலேயே தங்கியிருந்துப் பிறகு புக்ககம் சென்று சேர்ந்ததாக சரித்திரம் பார்க்கப்படுகிறது.

இப்படியுள்ளபோது, கந்தாடையண்ணன் திருத்தகப்பனாரான தேவராஜதோழப்பருடைய தீர்த்தம் (விண்ணாடு எய்திய தினம்) வர, சிற்றண்ணர் தேவியரான ஆய்ச்சியைத் அவ்விசேஷத்திற்குத் தளிகை பண்ணும்படி அழைத்தனர். ஆச்சியாரும் அப்படியே பண்ண, அண்ணன் முதலான கந்தாடை அய்யங்கார்கள் யாவரும் இஷ்டபந்தி அமுதுசெய்தனர். ஆச்சியார் திருக்கையால் ப்ரஸாதப்பட்ட வைபவத்தினால் அவர்கள் மனதில் ஜீயரிடம் மிக்க ப்ரதிபத்தி (அன்பு, கௌரவபுத்தி) உண்டாகி, தாங்களே ஆசார்யபுருஷர்களானதால் மனம் நிலைகொள்ளாமல் சயனித்திருக்க, ஸ்வப்னத்தில் முதலியாண்டானும் எம்பெருமானாருமாகத் தோன்றி, எம்பெருமானாரே மாமுனிகளாக புனரவதாரம் பண்ணியுள்ளார், என்றுணர்த்தி அங்கு ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கும்படி நியமிக்க, இந்த வ்ருத்தாந்தத்தை ஆச்சியாரிடம், சொல்லினர். ஆச்சியாரும் தமது தகப்பனாரும் தாமும் ஜீயரிடம் ஆச்ரயித்த படியைச் சொல்லி ஜீயரின் சொல்லிலடங்காத பெருமைகளையும் இவர்களுக்குப் பரக்கக் கூறினார்.



கந்தாடையண்ணனும் தமது உடன்பிறந்தவர்களுடனும் இன்னும் மற்ற கந்தாடை ஆசார்யர்களையும் அழைத்துக் கொண்டு ஒரு நன்னாளில் ஜீயரிடம் ஆச்ரயணம் வேண்ட, அவரும் யதிராஜர் விரும்பிப்போற்றிய முதலியாண்டானின் உறவு தமக்கு அவர் ஸந்ததியாரின் ஆத்மஸம்பந்தமாகக் கிட்டியது பற்றி பெருமகிழ்ச்சி கொண்டு, அவர்களுக்குத் திருவிலச்சினை ஸாதிக்கையில் இந்தப்பெருமை (முதலியாண்டான் ஸம்பந்தம்) தமது முதல் சிஷ்யரும் ப்ராணஸுஹ்ருத்துமான வானமாமலை ராமாநுஜ ஜீயருக்கும் ஆகவேணுமென்று அவரிடம் சிலர் ஆச்ரயிக்க வேணும் என்று விரும்ப, சிற்றண்ணர், ஆச்சியார் இவர்கள் குமாரரான வரதராஜரும் அவர் திருத்தம்பியான தாசாதி அப்பையும் ஆசார்ய நியமனத்தைச் சிரமேற்கொண்டு அவர் திருவுள்ளகப்பே பரம ப்ராப்யமென்று வானமாமலை ஜீயரிடம் ஆச்ரயணம் வேண்டினர்.

ஜீயரும், வரதராஜரை நம் "அப்பாச்சியாரண்ணாவோ!" என்று உகந்து வானமாமலை ராமாநுஜ ஜீயரிடம் திருவிலச்சினை ஆழ்வார்களை ஸாதித்து (தந்து), அப்பாச்சியாரண்ணாவை அணைத்துக்கொண்டு தப்தசக்ராங்கனம் பண்ணிவைத்தார். அது முதல் ஆச்சியார் குமாரரான வரதராஜருக்கு அப்பாச்சியாரண்ணா என்றே திருநாமமாயிற்று.

ஸ்ரீமத்வாநமஹாசைல ராமாநுஜமுநிப்ரியம்
வாதூல வரதாசார்யம் வந்தே வாத்ஸல்யஸாகரம்

என்று இவரை நாம் போற்றி வணங்குகிறோம்.

மணவாளமாமுனிகளிடம் விசேஷ ப்ரதிபத்தி உடையவர் அப்பாச்சியாரண்ணா. அவரபிமானத்தைப்

RangaRakes

tamilnavarasam.com

பூரணமாகப் பெற்றவர். ஒரு சமயம் மாமுனிகள் யாத்திரையடைவே பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளியிருந்த போது அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள், தங்களுக்குத் தலைவராய் தங்கள் ஆத்மநலன் பேணித்திருத்த ஒருவரை நியமிக்கும்படி வேண்ட, மாமுனிகளும், அப்பாச்சியாரண்ணாவை அழைத்து, "முதலியாண்டான் திருவம்சத்தில் முக்யரான நீர் ஆண்டான், தோழப்பர், முதலானார்க்கு உகப்பாக நம் வார்த்தையை அநுஸரித்து இவர்களுக்கு ஹிதமருளிச் செய்து கொண்டு பேரருளாளரின் கைங்கர்யத்தில் ஊன்றி அவருக்கு மங்களாசாஸனபரராய் இங்கே நித்யவாஸம் பண்ணும்" என்று நியமித்து,

ஸ்ரீ தீர்த்ததேவராஜார்ய தநயாம் வேதிவிச்ருதா
தஸ்யாஸ்தநூரஜோ வரத: காஞ்சீநகரபூஷண:

என்று போற்றி ஆசீர்வதித்தார். ஆவணியில் ஹஸ்தம் கூடிய திருநாளில் அவதரித்த இவர் பேரருளாளனின் அம்சம் பொருந்தியவர் என்பர் பெரியோர். இவர் குமாரரே திருமாசிக்கேட்டையில் திருவவதாரம் பண்ணி "திருக்கச்சி மாநகரம் செழிக்க வந்த" அண்ணாவிலப்பன் குமாரவேங்கடாசாரிய ஸ்வாமி. இவர்களின் வழித் தோன்றல்களான ஆசார்ய பரம்பரையினரே இந்த முதலியாண்டான் திருமாளிகை ஆசார்ய பீடத்தை அலங்கரித்து நம்மெல்லாரையும் வாழ்வித்து வருகின்றனர்.

## 11. மணவாளமாமுனிகளும் முதலியாண்டான் திருவம்சத்தவர்களும்

மணவாள மாமுனிகள் தாம் மிகவும் விரும்பி அடைந்த முதலியாண்டானுடைய ஸம்பந்தம் தமது

RangaRakes



ப்ரதம சிஷ்யரான ஸ்ரீவானமாமலை ராமாநுஜ ஜீயருக்கும் வேண்டுமென்று கந்தாடை சிற்றண்ணர் குமாரரான அப்பாச்சியாரண்ணாவை ஜீயர் திருவடிகளில் ஆச்ரயித்து வைத்தார் என்று கண்டோம். ஸதாசார்ய ஸம்பந்தம் மிகவும் போற்றத்தக்கது. விரும்பி அடையத்தக்கது என்பது போலவே ஸச்சிஷ்ய ஸம்பந்தமும். வானமாமலை ராமாநுஜ ஜீயருக்குப் 'பொன்னடிக்கால் ஜீயர்' என்று ப்ரஸித்தி உண்டு. 'செம்பொற்கழலடிச் செல்வன்' என்று பலராமரைக் கொண்டாடுவது போல. அது போலவே அப்பாச்சியாரண்ணா வானமாமலை ஜீயரை ஆச்ரயித்த ராசி ஜீயருக்குப் பல சிறப்புகள் உண்டாயின என்று பெரியோர் பணிப்பர்.

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி (28வது பட்டம்) வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி நமது ஸ்வாமியின் ஷஷ்டியப்த பூர்த்தி அவஸரத்தில் அநுக்ரஹித்த மங்களாசாஸன பத்திரிக்கையில், "ஸ்ரீ வானமாமலை ஒன்றான ஸ்வாமியிடத்தில் அப்பாச்சி யாரண்ணா முதல் முதலாக ஆச்ரயித்தார். இவருடைய ஸம்பந்தத்தாலே வானமாமலை ராமாநுஜஜீயரும் அஷ்டதிக்கஜங்களை நியமித்தும் அஸங்க்யேயமானவர்களால் ஆச்ரயிக்கப் பெற்றும் அரங்கநகரப்பன் தாமே தம்முடைய க்ருபையாலே ஆராத்ய தெய்வமாக வானமாமலை ஜீயர் கைபுகுந்ததும், அப்படியே வானமாமலைப்பெருமாள் ஜீயரை மாமனாராக வரிக்க, ஜீயரும் திருமலையில் எழுந்தருளியிருந்துத் தம்மைப் பிதாவாக வரித்த ஸ்ரீவரமங்கைத் தாயாரை தேவநாயகனுக்குப் பெரியாழ்வாரை விவாஹம் பண்ணிவைத்து நித்யமாக அநுபவிக்கும் பெருமையும், அப்படியே அப்பாச்சி யாரண்ணாவும் ஆசார்ய நியமனத்தினாலே பெருமாள் கோவிலில் தேவப்பெருமாளுக்கு அநேகத் திருப்பணி

tamilnavarasam.com

களைச் செய்து, மற்றும் திருப்பதிகளிலும் நிர்வாகத்தை நடத்திக் கொண்டு போந்தமை அப்ரதிம வைபவமே யாகும்" என்று ஸாதித்துள்ளார்.

மணவாள மாமுனிகள் அப்பாச்சியாரண்ணாவை பெருமாள் கோவிலுக்கு தர்சநப்ரவர்த்தகராய் நியமித்தாராயினும், அண்ணா மாமுனிகளைப் பிரிந்து செல்ல இஷ்டமில்லாமல் மிகவும் வருந்தினார். மாமுனிகளும் ஜீர்ணமான (மிகவும் பழையதான) தமது திருக்கைச் செம்பைத் (இது வானமாமலை ஜீயர் ஆசார்யப்ரஸாதம் என்று ஸேவித்திருந்தது) தந்து, அந்த த்ரவ்யத்தைக் கொண்டு தம்மைப் போல இரண்டு (அர்ச்சை) திருமேனிகளை வடிப்பித்து, ஒன்றை அண்ணாவுக்கும் மற்றதை வானமாமலை ஜீயருக்கும் திருவாராதனமாக அநுக்ரஹித்தார்.

ஆட்கொண்டவில்லி ஜீயர் திருவாராதனமான தீமனம் கெடுத்தார் என்ற எம்பெருமானையும் எழுந்தருளப் பண்ணித்தந்து பெருமாள் கோவிலில் தோழப்பர் திருமாளிகை இவருக்கு இருப்பாயிருக்கும் படியும் நியமித்தார். தமது முன்னோர்கள் திருமாளிகை, தேவப்பெருமாளின் ஷட்பேரத்தில் ஒருவரான அழைத்து வாழ்வித்தவர். மணவாளமாமுனிகள் திருவாராதனமாகத் தந்த தீமனம் கெடுத்தார். மாமுனிகள் திருமேனி எல்லாம் வரிசையாகப் பெற்ற அப்பாச்சியாரண்ணா பேரருளாளனின் கைங்கர்யத்தில் ஊன்றி எழுந்தருளியிருந்தார். அப்பாச்சியாரண்ணாவை நாமாகவே ப்ரதிபத்திபண்ணிப் போருங்கோள் என்று மணவாளமாமுனிகள் நியமித்ததாக யதீந்த்ரப்ரவணப்ரபாவம் கூறும்,

அப்பாச்சியாரண்ணா ஒன்றான வானமாமலை ஸ்வாமியின் அஷ்டதிக்கஜங்களில் முதல்வராகத்திகழ்ந்தார்.



பெருமாள்கோவிலில் ஆழ்வார் திருவீதியில் உடையருக்குத் தனிக்கோயில் கட்டி உத்ஸவ திருமேனியையும் ப்ரதிஷ்டை பண்ணியருளினார். இவருடைய குமாரர் குமாரவேங்கடாசாரியர் என்று ப்ரஸித்தான அண்ணாவிலப்பன். இவருக்கு பாடலாத்ரி நரஸிம்மஸ்வாமி ஸ்வப்நம் ஸாதித்து, மணல் மேடிட்டிருந்த தமது கோவிலைக் காடுவெட்டி ஜீர்ணோத்தாரணம் பண்ணும்படி நியமித்தபடி பண்ணி அந்தராளம் விமானம் முதலியவைகளையும் ஏற்படுத்தி, சிங்கப்பெருமாள் கோவில் என்ற ஊரையும் குடிபுகுவித்து எம்பெருமானையும் நன்றாக ஆராதித்துக் கொண்டிருந்தார்.

அப்பாச்சியாரண்ணாவின் பெரிய தகப்பனார் வேடலப்பை என்ற ஆசாரியர், இவர் மஹாவித்வானாய்ப் பல பரஸமய வித்வான்களுடன் வாதுபுரிந்து வென்றவர். ஒரு சமயம் க்ருஷ்ணாநந்தி என்ற ஏகதண்ட ஸன்யாசி மணவாள மாமுனிகளை வாதப்போருக்கு அழைத்தான். மாமுனிகள் அவனை வாதத்தில் எளிதில் வெல்லவெல்ல வராயினும், மங்களாசாஸனத்துக்கு பங்கம் வருமென்று வாதில் ருசியில்லாமல் வேடலப்பையை ஸ்ரீமுகம் விடுத்தழைத்தார். க்ருஷ்ண நந்தி முன்பு வேடலப்பை யிடம் சாஸ்த்ரம் பயின்றவன். அவர் தன்னுடன் வாதத்துக்கு வருகிறார் என்று அறிந்து அஞ்சி அவரடி பணிந்து வாதம் பண்ணாமலேயே ஸ்ரீரங்கத்தை விட்டகன்றான். அப்பையும் இவ்விஷயத்தை மாமுனிகளிடம் விண்ணப்பம் பண்ணி அவரநுக்ரஹத்துடன் ஸ்வக்ராமம் மீண்டார்.

இந்த அவஸரத்தில் மாமுனிகள் தமது உகப்பின் மிகுதியால் முதலியாண்டான் திருவம்ச விஷயமாக இரு

ச்லோகங்கள் அருளிச் செய்ததாக யதீந்த்ரப்ரவண ப்ரபாவம் கூறுகிறது. அவையாவன:

வித்யா விமுக்தி ஜநந் விநயாதிகத்வம்
ஆசார ஸம்பதநுவேல விலாஸ சீலம்।
ஸ்ரீலக்ஷ்மணார்ய கருணா பரிப்ரும்ஹிதாநாம்
சித்ரம் ந தாசரதி வம்ச ஸமுத்பவாநாம்॥

ஸ்ரீராமாநுஜ யோகீந்த்ர கருணா பரிப்ரும்ஹிதாம்
ச்ரேயஸீம் அநகாம் வந்தே ஸ்ரீமத்வாதூலஸந்ததிம்

மோக்ஷத்துக்கு உதவக்கூடிய ஞானம், அதிசயிக்கத்தக்க விநயம் அநுஷ்டானச் செல்வம், வேளைக்குவேளை வளரும் சீலம் இவை எம்பெருமானார் கருணைக்கு இலக்கான ஸ்ரீமுதலியாண்டான் வம்சத்தினருக்கு வாய்த்துள்ளத்தில் வியப்பில்லை. யோகியர் தலைவரான ஸ்ரீராமாநுஜரின் கருணையால் பல்கியதும், சிறந்ததும் குறையொன்றில்லாததுமான ஸ்ரீமத்வாதுல குலக்கொடி வழியை வணங்குகிறேன் என்பது இந்த ச்லோகங்களின் திரண்ட பொருளாகும்.

எம்பெருமானாருக்கு முதலியாண்டானிடம் பரமக்ருபையும் ப்ரீதியும் இருந்ததை முன்னமே பேசியுள்ளோம். அதே ஆதரம் யதி புநரவதாரரான மணவாளமாமுனிகளுக்கு இந்த மஹாத் ஸந்ததியினரிடம் இருந்தது. கோவில் கந்தாடையண்ணனைத் தமது அஷ்ட திக்கஜாசார்யர்களில் ஒருவராய் நியமித்து, பகவத் ஸம்பந்தாசாரியர் என்ற திருநாமம் சாத்தி ஆசார்ய ஸிம்ஹாஸனத்தில் அபிஷேகம் பண்ணித் தம்முடன் எப்போதுமிருக்கும்படி நியமித்து, முன்பு கலாபத்தில் ஸ்ரீரங்கராஜநாயன் வாதூலதேசிகருக்குப் பிறகு வேதாசாரிய பட்டர் பரித்துக்கொண்ட முதலியாண்டான தீனங்களில், பெரும்பாலானவற்றை இவரதாக்கி வைத்தார்



என்று கோயிலொழுகு கூறுகிறது. அப்பாச்சியாரண்ணாவை அநுக்ரஹித்ததை மேலே பேசியுள்ளோம். துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர் (உபதேசரத்தினமாலை-51) என்ற சொற்கள் குறித்தற்குரியவை.

## 12. நிகமனம்

### முதலியாண்டான் விஷயமான தனியன்கள்

பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா।
தஸ்ய தாசரதே: பாதௌ சிரஸா தாரயாம்யஹம்॥

ஸ்ரீவைஷ்ணவ சிரோபூஷா ஸ்ரீராமாநுபாதுகா।
ஸ்ரீவாதுல குலோத்தம்ஸ: ஸ்ரீதாசரதிரேததாம்॥

அஜஹத் பாகிநேயத்வம் பாதுகாத்வம் த்ரிதண்டதாம்।
ஸம்ப்ராப்தம் யதிராஜஸ்ய வந்தே தாசரதிம் குரும்॥

ஸ்ரீவைஷ்ணவாநாம் தாஸத்வ ஸ்வாமித்வ ப்ரபுதாஹ்வயம்।
வாதூலகுல தௌரேயம் வந்தே தாசரதிம் குரும்॥

ஸ்ரீராமாம்ச ஸமாவிஷ்டம் பாஞ்சஜந்யாம்ச ஸம்பவம்।
பஞ்சநாராயணஸ்தாந ஸ்தாபகம் குருமாச்ரயே॥

யஞ்சக்ரே பக்தநகரே தாம பஞ்சகமுத்தமம்।
ராமாநுஜார்ய ஸச்சாத்ரம் வந்தே தாசரதிம் குரும்॥

அநந்தநாராயண கோதாம்பிகா கர்ப்பஸம்பவம்।
பாகிநேயம் யதீந்த்ரஸ்ய பஜே தாசரதிம்குரும்॥

மேஷே புநர்வஸூதிநே தாசரத்யம்ச ஸம்பவம்।
யதீந்த்ர பாதுகாபிக்யம் வந்தே தாசரதிம்குரும்॥

RangaRakes tamilnavarasam.com

அத்திகிரி அருளாளர் அடிபணிந்தோன் வாழியே*
அருட்பச்சை வாரணத்தில் அவதரித்தான் வாழியே*
சித்திரையில் புனர்பூசம் சிறக்கவந்தோன் வாழியே*
சீபாடியம் ஈடுமுதல் சீர்பெறுவோன் வாழியே*
உத்தமமாம் வாதூலம் உயரவந்தோன் வாழியே*
ஊர்திருந்தச் சீர்பாதம் ஊன்றினான் வாழியே*
முத்திரையும் செங்கோலும் முடிபெறுவோன் வாழியே*
முதலியாண்டான் பொற்பதங்கள் ஊழிதொறும்வாழியே*

ஸ்வாமி முதலியாண்டான் ஆசார்யரான ஸ்வாமி உடையவர் ஸ்ரீபாதத்திலே கைங்கர்யத்தைச் செய்து, பெரிய பெருமாள் ஸந்நிதியிலே ஸ்ரீ ஸேனாபதி கைங்கர்ய துரந்தரராக வாதூல தேசிக பதம் நிர்வஹித்து ஸ்ரீரங்க ஸ்ரீயை அபிவிருத்தி செய்தவராய்க்கொண்டு 103 திருநக்ஷத்ரம் (கி.பி. 1136) கோயிலே உடையவரின் பாதுகாஸ்தானீயராக எழுந்தருளியிருந்தார்.

| | | |
|---|---|---|
| முதலியாண்டான் திருவவதாரம் | : | கி.பி. 1033 |
| முதலியாண்டான் திருநாடலங்கரித்தது | : | கி.பி. 1136 |
| முதலியாண்டான் திருநக்ஷத்ரம் | : | 103 |

அநுபந்தம்

# முதலியாண்டான் வைபவம்

ஸ்ரீகாஞ்சீமஹாவித்வான் ஸ்ரீ உ.வே. ப்ர.ப. ஸ்வாமி
(மதராஸ் ஸத்க்ரந்தஸபா (1948) வெளியீடு)
பன்னிருதிங்களநுபவம் என்ற நூலிலிருந்து

ஸ்வாமி எம்பெருமானார்க்கு ஸஹோதரிகள் இருவர்-நாச்சியாரம்மை யென்றும், தாமரையாளம்மை யென்றும். அவர்களுள் மூத்தவளுடைய திருக்குமாரர் முதலியாண்டான். பச்சை வாரணப்பெருமாள் கோவிலில் சித்திரை மாதப் புனர்வசு நன்னாளில் தோன்றியவர். பண்டு த்ரேதாயகத்தில் ராமாவதாரத்தில் ஸ்ரீமந் நாராயணன் ஸ்ரீராமனாகவும் ஆதிசேஷன் லக்ஷ்மணனாகவும் அவதரித்திருந்து. பெருமாள் இளையபெருமாளிடம் ஒழிவில் காலமெல்லாம் வழுவிலாத அடிமைகளைக் கொண்டு போந்தமை ப்ரஸித்தம். அந்த அவதாரத்தில் ஒரு பரமார்த்தம் பெருமாளுடைய திருவுள்ளத்தில் பட்டது. வகுத்த விஷயத்தில் அடிமை செய்வது ரஸமேயல்லது அடிமை கொள்வது ரஸமன்று என்றுபட்டது. அதனால், அந்த ஆதிசேஷனை சேஷியாக வைத்துத் தான் சேஷபூதனாக விருந்து அடிமை செய்து களிக்கக் காதல்கொண்டு த்வாபரயுகத்தில் அந்த ஆதிசேஷனை நம்பிமூத்தபிரானென்கிற பலராமனாக முன்தோன்றலாய்த் திருவவதரிப்பித்துத் தான் "பலதேவற்கோர் கீழ்க்கன்றாய்" என்று ஆண்டாளருளிச் செய்தபடி அவன் தம்பியான க்ருஷ்ணனாகத் தோன்றி, பலராமனுக்கு சேஷித்வத்தையும் தனக்கு சேஷத்வத்தையும் காட்டி நின்ற விடத்திலும், செய்து போந்த அதிமாநுஷ சேஷ்டிதங்களாலே தனக்கு சேஷித்வமே உலகறிய நின்றபடியால் அக்குறை தீர மீண்டும் ஒரு அவதாரம் செய்யத்திருவுள்ளங் கொண்டு இக்கலியுகத்தில், தம்பியான இளைய பெருமாள் இளையாழ்வாரென்கிற ஸ்வாமியாகவும் தான், தாசரதியென்கிற நிஜநாமத்துடனே முதலியாண்டானாகவும் திருவவதரிக்கலாயிற்று.

"பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா, தஸ்ய தாசரதே: பாதௌ சிரஸா தாரயாம்யஹம்" என்பது இவ்வாசிரியருடைய தனியனாதலால் ஸ்ரீராமாநுஜ பாதுகா என்றே இவர் வழங்கப்பெற்று வந்தார். எம்பார்க்கு ஸ்ரீராமாநுஜபதச்சாயை யென்கிற ப்ரஸித்தி போலே இவர்க்கு ராமாநுஜபாதுகை யென்கிற ப்ரஸித்தி நிகழ்ந்தது.

RangaRakes
tamilnavarasam.com

ஸ்வாமி ஆச்ரமஸ்வீகாரம் செய்துகொண்டு தென்னத்தியூரார் கழலிணைக்கீழே வாழ்ந்தருளுங்காலத்தில் கூரத்தாழ்வானோடு கூட இவரும் ஸ்வாமியை ஆச்ரயித்து வேதாந்த ரஹஸ்யார்த்தங்களை அதிகரித்து நல்விரகராயிருந்தார். திருத்தகப்பனாரான வாதூல குல திலக-அநந்தநாராயண தீக்ஷிதரிடத்திலேயே ஸாமாந்ய சாஸ்த்ரங்களையும் திவ்யப்ரபந்தங்களையும் அதிகரித்திருந்தபடியாலே ஸ்வாமியின் அபிமானத்திற்கு ஆழ்வானைப்போலவே இவரும் இலக்காயிருந்தார். ஸ்வாமி இவ்விருவரையுமே தண்டும் பவித்ரமுமாகத் திருவுள்ளம்பற்றி யிருந்தது.

"லௌகிகே ஸமயாசாரே க்ருதகல்போ விசாரத: " என்று ஸ்ரீராமபிரானைப்பற்றி ஸ்ரீராமாயணத்திற் கூறியது போல, ஸ்வாமியின் சிஷ்யவர்க்கங்களுள் இவர் லௌகிக ஸாமர்த்தியமும் சிறப்புறப் பொருந்தி யிருந்ததனால் ஸ்ரீரங்கநாத திவ்யாலய கைங்கர்ய நிர்வஹண துரந்தரத்வம் இவர்க்கு ப்ராப்தமாயிற்று. ஸேனைமுதலியார் போல விருந்து அரங்கன் கைங்கரியத்தை ஆண்டுவந்தபடியினாலேயே இவர்க்கு முதலியாண்டான் என்று திருநாமமாயிற்றென்பர் பெரியோர். கோயிலொழுகில் இவரைப்பற்றின ப்ரஸ்தாவத்தில் "முதலியாண்டானும் குறட்டிலேயிருந்து கோயில் கார்யத்தையும், உள்ளே கருவுகல வாசலிலே யிருந்து திருமேனி யுபசாரத்தையும், ஸந்நிதியிலேயிருந்து திருப்பவள வுபசாரங்களையும் உடையவர் நியமனப்படி ஆராய்ந்துகொண்டு அனைத்தழகும் கண்டருளப் பண்ணிக்கொண்டிருந்தார்" என்றுள்ளது.

திருவாய்மொழியீட்டில் (2-9-2.) " ஞானக் கை தா " என்றவிடத்தில் "எம்பார்க்கு ஆண்டானருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது. அதாவது- ஒரு கிணற்றிலே விழுந்தவனுக்கு இரண்டுபேர் கை கொடுத்தால் எடுக்குமவர்களுக்கு மெளிதாய் ஏறுமவனுக்கு மெளிதாயிருக்குமறே. அப்படியே யாகிறது என்று" - என்கிற ஐதிஹ்ய ஸ்ரீஸூக்தியுள்ளது. இதன் விவரணம் வருமாறு. - முதலியாண்டான் ஒருகால் திருநாராயணபுரத்தி -லெழுந்தருளியிருக்கையில் அவருடைய சிஷ்யரான வொரு ஸ்ரீவைஷ்ணவர் கோயிலிலே வந்து எம்பார் ஸந்நிதியிலே கைங்கர்யம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்போதொருநாள் சில ஸ்ரீவைஷ்ண -வர்களுக்கு எம்பார் திருவிலச்சினை ஸாதிக்க விருக்கையில் இந்த ஸ்ரீவைஷ்ணவரும் தமக்கும் (சக்ராங்கனம்) ஸாதிக்கும்படி வேண்டினார். அப்போது எம்பார் "உமக்கு விசேஷஸம்பந்த முண்டோ?" என்று அவரைக் கேட்க, தேவரீருடைய ஸம்பந்தமே ஸம்பந்தம்" என்று அவர் விண்ணப்பஞ்செய்ய, அவ்வளவிலே எம்பார் இவர் முதலியாண்டானுடைய ஸ்ரீபாதத்தவரென்று அறியாதே இவர்க்கும் பஞ்சஸம்ஸ்காரங்களைப் பண்ணி இவரைக்கொண்டு கைங்கரியங்களும் கொண்டெழுந்தருளியிரா நிற்கையில் ஆண்டானும் திரும்பிக் கோயிலிலே யெழுந்தருள, அப்போது அந்த ஸ்ரீவைஷ்ணவர் ஆண்டானை வந்து ஸேவிக்க, ஆண்டானும் முன்புபோலே இவரைக்கொண்டு வேண்டும் கைங்கரியங்களைக் கொள்ள, அப்போது எம்பாருமறிந்து ஆண்டான் பக்கலிலே யெழுந்தருளி, "கனக்க அபசாரப்பட்டேன்" என்றருளிச்செய்ய, இவருடைய திருவுள்ளத்தில் க்லேசத்தையறிந்து அப்போது ஆண்டானருளிச் செய்த வார்த்தை - "ஒரு கிணற்றிலே விழுந்தவனுக்கு இரண்டுபேர் கைகொடுத்தால் எடுக்குமவர்களுக்கும் எளிதாய் ஏறுமவனுக்கும் எளிதாயிருக்குமிறே, அப்படியேயாகிறது" என்று, ஸம்ஸாரஸாகரத்திலே அழுந்தினவனுக்கு இரண்டுபேர் கைகொடுத்தது போல தேவரீரும் கைகொடுத்தால் என்ன குறை? தேவரீர் தவறாக ஒன்றுஞ் செய்துவிட வில்லையே; எதற்காக க்லேசிப்பது? என்பது முதலியாண்டானுடைய பரமோதார மதுரமான திருவாக்கு. (கை கொடுப்பதாவது - ஞானக்கை கொடுப்பது)

முதலியாண்டான் பணித்தவார்த்தைகளென்று அரியனவாகச் சில காண்கின்றன: ஸ்ரீராமாயணத்திற்கு ஸ்வாபதேசார்த்தம்போலே சிலவார்த்தைகள் அருளிச்செய்தாராம்; அவையாவன -

1. பிராட்டிக்குச் சிறையிருப்புப்போலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸம்ஸாரத்திலிருப்பு.
2. பிராட்டி இளையபெருமாள்விஷயத்தில் அபசாரப்பட்டு உடனே பெருமாளைப் பிரிய நேர்ந்ததுபோல.சேதநர்களுக்கு பாகவதாபசாரம் எம்பெருமான் திரவடிஸம்பந்தத்தை விலகப்பண்ணும்.
3. பிராட்டிக்கு அசோகவனம் போலே இவர்களுக்கு ப்ரக்ருதிஸம் பந்தருபமான தேஹம்.
4. பிராட்டிக்கு அரக்கிகளின் ஸஹவாஸம்போலே இவர்களுக்குப் புத்ரகளத்ராதிகளின் ஸஹவாஸம்.
5. பிராட்டிக்கு மாரீசமாயாமிருகக் காட்சிபோலே இவர்களுக்கு "பாவியேனைப் பலநீ காட்டிப் படுப்பாயோ" என்னும்படியான விஷயாங்களின் காட்சி.

RangaRakes
tamilnavarasam.com

6. பிராட்டிக்குத் திருவடிநேர்பட்டாப்போலே இவர்களுக்கு ஆசார்யன் நேர்படுவது.
7. பிராட்டிக்குத் திருவடிசொன்ன ஸ்ரீராமகுணங்கள்போலே இவர்களுக்கு ஆசார்யனுபதேசிக்கும் பகவத்விஷயாதிகள்.
8. பிராட்டிக்குத்திருவடி அடையாளங்கள் கூறித் திருவாழிமோதிரம் கொடுத்ததுபோல இவர்களுக்கும் குருபரம்பரா பூர்வகமான திருமந்த்ரோபதேசம்.
9. பிராட்டி திருவடிக்குச் சூடாமணிகொடுத்தாப்போல இவர்கள் ஆசார்யன்விஷயத்தில் "தலையல்லால் கைம்மாறிலேனே" என்றிருக்குமிருப்பு.
10. பிராட்டிக்கு ஸ்ரீவிபீஷணாழ்வானது திருமகளாருடைய ஸஹவாஸமும் பேச்சும் தாரகமாயிருந்ததுபோல இவர்களுக்கு பாகவதஸஹவாஸமும் அவர்களுடைய திவ்யஸூக்திகளுமே தாரகமாயிருக்கும்.
11. பெருமாள் பிராட்டியிருந்தவிடத்தேவந்து விரோதிகளைக்கிழங்கெடுத்து அவளைக்கைக் கொண்டதுபோல, எம்பெருமான் "ஆவாரார்துணையென்று அலைநீர்க்லுளழுந்தும் நாவாய்போல் பிறவிக்கடலுள்நின்று துளங்குமிவர்களிடத்தேறவந்து " பொய்ந் நின்றஞானமும் -பொல்லாபொழுக்கு மழுக்குடம்புமாகிற விரோதிகளை வேரோடே களைந்து நித்யமுக்தர்களோடே ஒருகோவையாக்கும்படி கைக் கொண்டருள்வது...... இங்ஙனே பல பொருள்களுள.

வேதாந்ததேசிகன் இப்பொருள்களையே பெரும்பாலும் திருவுள்ளம்பற்றி:

தர்போதக்ர தசேந்த்ரியாநநமநோ நக்தஞ்சராதிஷ்டிதே
தேஹேஸ்மிந் பவஸிந்துநா பரிகதே தீநாம் தசாமாஸ்தித:
அத்யத்வே ஹநுமத்ஸமேந குருணா ஸமபோதிதார்த்தஸ்ஸூதி:
லங்காருத்தவிதேஹராஜதநயாந்யாயேந லாலப்யதே

(தர்போதக்ரதசேந்த்ரியாநந.........லாலப்யதே) என்கிற இந்த ச்லோகத்தை ஸங்கல்பஸூர்யோதயத்திலே பணித்தருளினர். அவ்வாசிரியர்தாமே ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஆண்டான்வார்த்தையாக அருளிச்செய்ததொன்றுண்டு. அதாவது -- (அதில்எட்டாவதான அதிகாரிவிபாகாதிகாரத்தில்) - "ஒருமலையில்நின்றும் ஒருமலையில்தாவும் ஸிம்ஹாசரீரத்தில் ஜந்துக்களைப் போலே பாஷ்யகாரர் ஸம்ஸாரலங்கநம் பண்ண அவரோடுண்டான குடல்துடக்காலே நாம் உத்தீர்ணராவுதொமென்று முதலியாண்டானருளிச்செய்த பாசுரம்" என்று.

RangaRakes

# ஸம்ப்ரதாய ரத்நம், ஸ்ரீ வைஷ்ணவஸிம்ஹம்



## Dr. V.V. ராமாநுஜன்

ஸ்ரீவெங்கடாபுரம் உருப்பட்டூர் ஸ்ரீநிவாஸாசாரியார், ஸ்ரீமதி ரங்கநாயகி அம்மாள் தம்பதியின் மூத்த பிள்ளையாய் ரௌத்ரி ஹ புரட்டாசி மீ (24.9.1920) அன்று பிறந்தார். திருவல்லிக்கேணி ஹிந்து ஹை ஸ்கூல், லயோலா மற்றும் ப்ரெஸிடென்ஸி கல்லூரிகளில் படித்து ரசாயனத் துறையில் முதுநிலைப்பட்டமும் அமெரிக்காவிலுள்ள ட்யூலேன் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப்பட்டம் பெற்று அண்ணாமலை மற்றும் சென்னை பல்கலைக்கழகங்களில் பேராசிரியராக 45 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.

சிறுவயதலிருந்தே பகவத்கைங்கர்யத்திலும் ஸம்ப்ரதாய அறிவை வளர்த்துக்கொள்வதிலும் ஊக்கம் கொண்டு அருளிச்செயல், உபயுக்த வேதபாகங்கள், பூர்வாசார்ய ஸ்தோத்ரங்கள் (மூலம்) கற்று ஸ்ரீகாஞ்சி ப்ர.ப. அண்ணங்கராசாரிய ஸ்வாமி, ஸ்ரீ காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ நல்லான் ராமகிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீவேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி, ஸ்ரீதிருநாராயணபுரம் சதாபிஷேகம் ஸ்வாமி முதலான பேரறிஞர்கள் திருவடிகளில் பணிந்து ஸ்ரீவைஷ்ணவ க்ரந்தங்களை வரியடைவே அறியக்கற்று வல்லவரானார்.

கடந்த 23 ஆண்டுகாலமாக யதிராஜ பாதுகா எனும் ஸ்ரீவைஷ்ணவ மாத இதழை ஆசிரியராக விருந்து நடத்திவரும் ஸ்ரீராமாநுஜன் பல நூற்றுக்கணக்கான ஸம்ப்ரதாயக் கட்டுரைகளை எழுதியுள்ளார். பல சிறப்பு மலர்களைப் புதிப்பித்துள்ள இவர் யதீந்த்ரப்ரவணப்ரபாவம் எனும் பூர்வாசார்ய க்ரந்தத்தை சுமார் ஒரு நூற்றாண்டு காலத்துக்குப் பின் முதலாக 1992ல் பதிப்பித்து வெளியிட்டார். ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாம விளக்கவுரை, கத்யத்ரய விரிவுரை (ஆங்கிலம்), பகவத் கீதாஸாரம், சிறையிருந்தவளேற்றம், ஸ்ரீ பார்த்தசாரதி திருக்கோளூரம்மாள் திருவல்லிக்கேணியம்மாள் ரகஸியங்கள் விவரணம், மற்றம் பல நூல்களையும் தாமேயெழுதி வெளியிட்டுள்ளார்.

ப்ரவசனப்பணியிலும்-உபந்யாஸங்கள், க்ரந்தகாலக்ஷேபங்கள்

- ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகிறார்.

tamilnavarasam.com